VISIT…


பொன்
மானைத்தேடி
ரமணிசந்திரன்

பொன் மானைத் தேடி...

1

அதிகாலை நேரம்தான். அந்த நேரத்தில் விழித்துக் கொள்ளக் கூடாது என்று நினைத்துக் கொண்டே தான் இரவு படுத்தாள் சுரபி. ஆனால் பல்லாண்டுப் பழக்கம். எழுந்து விட்டாள். 'தொட்டில் பழக்கம்' என்பார்களே, அதுபோல, நினைவு தெரிந்த நாளில் இருந்து பழகிவிட்ட பழக்கம், சுடு காடு போய்த்தான் நிற்குமோ, அல்லது அங்கேயும் பேய் வடிவில் எழுந்து நின்று ஆரியோதயம் பார்த்துக் கொண்டிருப் பாளா?

வழக்கம் போல வாய் கொப்பளித்து, ஒரு தம்ளர் தண் ணீர் அருந்தி விட்டு, கிழக்குப் பக்கத்து சன்னல் அருகே போய் நின்றாள் சுரபி.

கீழ்வானில் செவ்வரி ஓடியிருந்தது. செவ்வரிகளின் இடையே இருந்த கங்குல் கருமை மெல்ல மெல்ல மறைய, அந்த இடமெல்லாம் ஆதவன் ஒளியால் சென்னிறமாயிற்று.

இருட்டோடு இரவின் குளிரையும் விரட்டியபடி அழகும் கம்பீரமுமாக இதமான கதகதப்பூட்டியபடி எவ்வளவு சினேகத்துடன் செங்கதிரோன் உதயமாகிறான்!

இந்த இனிமையை மனமார ரசிக்குமுன் வெய்ய கதிரோனாய் மாறி உச்சி வெயிலால் மண்டையைப் பிளக்கச் செய்யும் கொடுமைக்காரனாக மாறிவிடுவது என்ன நியாயம்?

இந்த நியாய அநியாயம் பற்றிக் கேட்பது என்றாலும் அந்த பகலவனைத்தான் கேட்க வேண்டும்.. அல்லது கதிரவனை.

என்ன பைத்தியக்காரத்தனம்!

இரவும் பகலும், காலையும் மாலையும் மாறி மாறி வருவது இயற்கை; பூமியின் சுழற்சியால் ஏற்படுவது என்பது அவள் படித்தறிந்த விஷயம். அப்படியிருக்க இயற்கையின் தன்மைக்கு இந்தச் சூரியனைக் குற்றம் சாட்டுவதும் கூண்டில் நிறுத்திக் கேட்க நினைப்பதும் எவ்வளவு முட்டாள்தனம்!

இல்லை... இது கையாலாகாத்தனம். ஒரு கதிரவனுக்கு உணர்த்த முடியாத கையாலாகாத்தனம் இப்படி ஏதெதின் மேலோ குற்றம் சாட்டிப் பார்க்கிறது.

இளங்காலையின் அழகு சட்டெனச் சலித்துவிட, ஒரு பெருமூச்சுடன் திரும்பினாள் சுரபி.

சுரபி!

என்ன பெயர் என்று இதை வைத்தார்கள்?

சுரபியா? எனக்கு அதைத்தா, இதைத்தா என்று சின்ன வயதில் அனைவரின் கிண்டலுக்கும் ஆளாக வைத்த பெயர்!

''அம்மா, நீ சுரபி. வற்றாது வழங்குகிறவள். இந்தக் கிழவனுக்கு இந்த வரம் கொடு, அம்மா!'' என்று சொன்னதும் உச்சி குளிர்ந்து தன்னைத்தானே முட்டாளடித்துக் கொள்ள வைத்த பெயர்!

கடந்த சில மாதங்களாக அடிக்கடி நடப்பது போல அன்றும் சுரபிக்கு மனம் கெட்டுப் போயிற்று. உற்சாகமற்று, ஏனோ தானோ என்று வேலைகளை முடித்து, எதையும் செய்து உண்ணுமளவு தென்பற்று, வெறும் ஒருவாய்க் காபியுடன் அவள் பணிபுரியும் கடைக்குச் சென்றாள்.

மதுரையில் பெரியதொரு 'ரெடிமேடு' துணிக்கடை அது. எந்த சீசனிலும் விற்பனை இருக்கும். சொந்த விஷயம் நினைவே வராமல் வேலையில் மூழ்கிவிட முடிந்ததால் அவளுக்கு இந்த வேலை பிடித்தம் தான்.

ஆனால் வயிறு காலியாக இருந்ததாலோ என்னவோ, அன்று எல்லாம் அலுப்பாயிருந்தது.

விளைவு, மதிய இடைவேளையின் போது நிர்வாகி கூப்பிட்டு அனுப்பினார். ''பாரம்மா சுரபி, கஸ்டமர்களின் மனம் திருப்தியாக இருக்கும் வரைதான் ஒரு கடை உயிரோடு இயங்க முடியும். இன்றைக்கு அவர்கள் வாங்குகிறார்களோ இல்லையோ, இந்தக் கடைக்குப் போனால் முழு ஒத்துழைப்பு கிடைக்கும் என்ற எண்ணம் அவர்கள் மனதில் பதிய வேண்டும். இல்லையானால் நாளை, பின்னே அவர்கள் இந்த கடை வாசல் தாண்டி உள்ளே வர மாட்டார்கள். உனக்கு இந்த மாதிரிக் கடையில் வேலை பார்த்த அனுபவம் இல்லாவிட்டால் கூட, விற்பனைப் பேச்சில் நீ கெட்டிக்காரி என்று உன் சினேகிதி சொன்னதை வைத்துத்தான் இங்கே வேலை கொடுத்தேன். ஆனால் இன்றைக்கு நீ அப்படி நடந்து கொள்ளவில்லை'' என்றார் குரலில் கண்டனத்துடன்.

''தன்நெஞ்சறிய பொய்யற்க' அல்லவா? பதில் சொல்ல முடியாமல் தலைகுனிந்து நின்றாள் சுரபி.

''அடிக்கடி இப்படித்தான் செய்கிறாய். நீ ஒழுங்காக வேலை செய்கிற வேளைகளிலும் பார்த்திருப்பதால் உன்னை வெளியே போகச் சொல்லவும் முடியவில்லை. ஏனம்மா இப்படிச் செய்கிறாய்'' என்றார் அவர் சலிப்புடன்.

''கா.. காலையில் லேட்டாகி விட்டது சார், சாப்பிட வில்லை.... அதனால் தலை.. தலைவலி...'' பொய்யும் மெய்யு மாகத் தடுமாறினாள் சுரபி.

''ஓ... இப்போதுகூட நீ சாப்பிட்டது போலத் தெரியவில் லையே? கொண்டு வரவில்லையா? பையனை அனுப்பி ஏதா வது வாங்கிவரச் சொல்லிச் சாப்பிடு. வேண்டாமா? சரி தான்போ.. இப்படிப் பட்டினி கிடந்தால் உடம்பு என்னத்திற்கா கும்? சும்மாவே வந்ததற்கு இப்போது மெலிந்திருக்கிறாய். முரளி.. டேய் முரளி.. இதோ.. இந்தம்மா சாப்பாடு கொண்டு வரவில்லையாம். இந்தா, பணம். பக்கத்து ஓட்டலில் ஒரு மசால் தோசை வாங்கிக் கொண்டு வந்து கொடு'' என்று பையனிடம் பணம் கொடுத்து அனுப்பினார் ஆதிமூலம்.

''ந.. நன்றி சார்''

''எனக்கு உன் நன்றி வேண்டியது இல்லையம்மா.. நீ ஒழுங்காய் வேலை செய்ய வேண்டும். அவ்வளவுதான். பார், கஸ்டமருக்கு தெரியுமா, நீ பட்டினியால் சரியாகப் பதில் சொல்லவில்லை; நாலு 'டிரஸ்' எடுத்துக் காட்டவில்லை என்று? திமிர் என்பர்கள். சர்வீஸ் பத்தாது இந்தக் கடையில் என்று முத்திரை குத்தி விடுவார்கள். அப்படி நடக்காமல் உன் கெட்டிக்காரத்தனமான பேச்சால் மேலே நாலு உடைகள் விற் றுக் கொடு. அதுபோதும். உன்னால் அது முடியும். சாத்திய மான காரியம்தான். உன் பேச்சை அவ்வப்போது நான் கேட்டி ருக்கிறேனே''

''உன் பேச்சைக் கேட்டபிறகு தான் இப்படி ஓர் ஐடி யாவே எனக்கு வந்தது சுரபிம்மா...''

நன்றாய் வந்தது; அவளை நாசமாக்க என்று... கடவுளே! இந்தத் துன்பத்திலிருந்து அவளுக்கு விடுதலையே கிடை யாதா? முழுக்க விடுதலை என்று வேண்டாம், பரவாயில்லை. அது பேராசையும் கூட. ஆனால் இதயத்தைப் புழுவாக அரிக்

கும் வேதனை கொஞ்சமேனும் குறையலாம் இல்லையா? அதற்குக்கூடவா அவள் கொடுத்து வைக்கவில்லை?

மிகவும் சிரமப்பட்டு, சொந்த நினைவுகளை ஒதுக்கி விட்டு, முழுமனதோடு வேலையில் இறங்கினாள் சுரபி. குறைந்தபட்சமாய்த் தொழிலில் வெற்றிகிட்டத்தான் செய்தது.

பெருமளவு பெண்கள் பணிபுரியும் நிறுவனம் என்ப தால், அவர்கள் வீடு சேர அகாலமாகி விடக் கூடாது எனும் நிர்வாகத்தின் நல்ல எண்ணத்தால் அந்தக் கடையில் எட்டு மணிக்கெல்லாம் கணக்கு முடித்துக் கிளம்பி விடுவார்கள்.

மதிய உணவுக்கென்று நிர்வாகி கொடுத்த ஐந்து ரூபாயை அவள் திருப்பிய போது, அவர் வாங்க மறுத்து விட்டார்.

''நீ மதியத்துக்கு மேல் செய்த வேலைக்கு இன்னமும் அதிகமாகவே தரலாம். அத்தோடு.. இங்கே வேலை செய்யும் எல்லோரும் எனக்குப் பிள்ளைகள் மாதிரிதான், அம்மா. அதி லும் நீ கிட்டத்தட்ட மகளேதான். உன் சினேகிதி — என் மகள், ''நீ எப்படி இருக்கிறாய், தேறியிருக்கிறாயா?'' என்று கேட்டு எழுதி இருக்கிறாள். என்ன எழுதட்டும். சாண் ஏறி முழம் சறுக்குகிறாய் என்று எழுதட்டுமா?'' என்று ஒரு வருத்தமான சிரிப்புடன் வினவினார் ஆதிமூலம்.

லேசாக முறுவலித்து, ''நன்றாயிருக்கிறேன் என்று எழு துங்கள், சார். நந்தினிக்கு நன்றி சொன்னேன் என்றும் எழுதுங் கள். அப்புறம்.. எப்போது தொந்தியும் தொப்பையுமாக வரப் போகிறாள் என்று கேட்டதாகவும் எழுதுங்கள்'' என்று கூறிச் சிரித்தாள் சுரபி.

அவரது சிரித்த முகம் மாறுவதற்கு அவகாசம் கொடாமல் உடனே கிளம்பி விட்டாள்.

வீட்டை அடைந்ததும் வீட்டுக்காரருடைய மகள், நாலு வயதுச் சிறுமி அர்ச்சனா ஓடிவந்தாள். ''ஆன்ட்டி, உங்களைப் பார்க்க ஒரு அங்கிள் வந்தார். நீங்கள் இல்லை என்றதும்

அப்புறம் வர்றேன்னு போயிட்டார்'' என்று அபிநயத்துடன் விவரித்தாள்.

தன்னைப் பார்க்க யார் வந்திருக்கக்கூடும் என்று யோசிக்கத் தொடங்கவுமே சிறுமி குழம்பி விட்டாள் என்று தெரிந்து விட்டது சுரபிக்கு. அடுத்த 'போர்ஷன்' பெண்ணைத் தேடி யாரோ வந்திருக்கிறார்கள். அவளுடைய அண்ணனை முந்திக் கொண்டு சொல்கிற போட்டி வேகத்தில் முதலில் வந்த 'ஆண்ட்டி'யிடம் ஒப்புவித்து விட்டாள் குழந்தை.

முறுவலோடு அர்ச்சனாவின் குண்டுக் கன்னத்தை வருடி, ''தாங்க்யூ'' சொல்லிவிட்டுப் படியேறினாள் சுரபி.

கைப்பையை அலமாரித் தட்டில் வைத்துவிட்டு ஓய்ந்து அமர்ந்தவளுக்கு எதைச் செய்யவும் மனம் வரவில்லை.

ஒரே ஒரு மசால் தோசையில் ஒருநாள் உணவை முடித்துக் கொள்ள முடியாது என்று நன்றாகத் தெரிந்திருந்தும், விட்டத்தை வெறித்தபடி அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

மாடிப்படியில் யாரோ ஏறுகிற சத்தம் கேட்டது.

பக்கத்து 'போர்ஷன்' லலிதா எப்போதுமே தாமதமாக வருகிறவள். வேலை ஐந்தரைக்கு முடிந்து விடுமானாலும் சும்மா 'விண்டோ ஷாப்பிங்'காவது பண்ணிவிட்டுத் தாமதமாகத்தான் வீடு திரும்புவாள். மாத முதலில் சினிமா, நாடகம், அவசரமாகத் திரும்பி வந்தால் வரவேற்க யார் இருக்கிறார்களாம் என்பாள்.

கதவைத் தட்டும் ஓசை கேட்கவும், சலிப்புடன் எழுந்தாள் சுரபி. இப்போது லலிதாவுக்கு என்ன வேண்டும்?

''லலிதா, எனக்குத் தலை...'' என்றபடியே கதவைத் திறந்தவள் வாய் வார்த்தை மறந்து விடத் திகைத்து நின்றாள்.

அங்கே அவன் நின்றான் — கதிரவன், அவளுடைய கணவன்!

2

கதிரவன்!

எவனை இனிக் கண்ணால் காணவே போவதில்லை என்று எண்ணி மனம் நொந்திருந்தாளோ, அந்தக் கதிரவன்.

எவன் மூன்று மாதங்களுக்கு முன்பாக, ''இனி நாம் பிரிவது தவிர வேறு வழியே இல்லை'' என்று சற்றும் இரக்கமற்றுச் சொன்னானோ அதே கதிரவன்!

'கண்ணிழந்தான் பெற்றிழந்தான்' என்பது போலக் குடும்பம், அன்பு, பாசம், அரவணைப்பு என்று எதையும் அறிந்திராத சுரபிக்கு அந்த சுகங்களைக் காட்டி உடனேயே தட்டிப் பறித்து, இழப்பை எண்ணி எண்ணி அவள் தவிக்கும்படிச் செய்த அவளுடைய கணவனான அதே கதிரவன்.

அவளது அந்த ஒற்றையறை வீட்டு வாயிலில் நின்று கதவைத் தட்டிக் கொண்டிருந்தான்.

இவனே இன்னொருவன் என்றால், 'உனக்குச் செய்த பிழையை உணர்ந்து விட்டேன் கண்ணே, வா, முன்பு போல இருவரும் கூடி வாழ்வோம்' என்று அழைக்க வந்திருக்கக் கூடும் என்று மனம் துள்ள... ஒரு சிறு எதிர்பார்ப்பு ஏற்படவேனும் இடம் உண்டு.

ஆனால் கதிரவனோடு அந்த மாதிரி இணக்கங்களைச் சம்பந்தப்படுத்திப் பார்க்கக் கூடத் தோன்றாமல் அவனை வெறித்து நோக்கியபடி அப்படியே நின்றாள் சுரபி.

அவன் பின்னிருந்து, ''நீ வர இரவு எட்டரை மணி ஆகும்; நீங்கள் நாளைக் காலையில் வந்து பாருங்கள் என்று

தான் சொல்லி அனுப்பினேன். ஆனால் அவர் இப்போதே வந்து நிற்கிறார். நான் வேணுமானால் அர்ச்சனா அப்பாவை வரச் சொல்லட்டுமா'' என்று கொஞ்சம் கவலையுடனேயே கேட்டாள் அர்ச்சனாவுடைய அன்னை — வீட்டின் உடை மைக்காரி.

இந்த வீட்டில் இந்தப் பாதுகாப்பு ஓர் அதிகப்படி நன்மை.

அடுத்தவள் லலிதா, இதைப் பெரிதாக எண்ணாவிட்டா லும் தன் பிழையின்றித் தனியளாக்கப்பட்டுத் தைரியம் குலைந்திருந்த சுரபிக்கு இது பெரிய வரப்பிரசாதமே.

எந்தவித பாவமும் அற்ற ஒரு கீழ்க்கண் பார்வையை அவளிடம் செலுத்தியது தவிர கதிரவன் வீட்டுக்காரியின் பேச் சைக் கண்டுகொண்டதாக காட்டிக் கொள்ளவில்லை. ''உன்னி டம் சற்றுத் தனியே பேச வேண்டும். உள்ளே வரலாமில் லையா?''

கூடாது என்றால் இப்போது இவன் என்ன செய்வான்?

மனதை முகத்தில் காட்டாமல் மறைத்து அவனுக்கு வழி விட்டவள், வீட்டுக்காரப் பெண்மணியைப் பார்த்து, ''இவர்... ரொம்ப நெருங்கிய உறவினர்தான், அக்கா பயப்பட ஒன்றும் இல்லை'' என்று கூறி உதட்டால் முறுவலித்தாள். முகம் தெளிந்து அவள் செல்லவும் சுரபியும் உள்ளே வந்தாள்.

அது நடுத்தரமான அறைதான். ஆனால் சமையலுக் கென்று கொஞ்சத்தைத் திரையிட்டு மறைத்து விட்டதால் ஓர ளவு சிறியதாகியிருந்த அறை. அதை மேலும் சிறிதாக்கிக் கொண்டு நின்றபடி சுற்றிலும் நோட்டமிட்டுக் கொண்டிருந் தான் கதிரவன்.

வீட்டுக்காரர்கள் உபயமாய்க் கிடைத்த கட்டில் ஒன்று தான் உட்காரக் கூடியது. அதைக் காட்டி, ''உட்காருங்கள்'' என்றாள் சுரபி.

அவளை ஒருதரம் ஏற இறங்க நோக்கி விட்டு, ''நீ உட் கார். ஓய்ந்து போயிருப்பவள் நீதான்'' என்றான் அவன், குற்றம் சாட்டுவது போல.

''வேலை முடித்து திரும்பி வந்த உடனே இதைவிட உற்சாகமாக இருப்பது கடினம்'' என்றாள் அவள் பொதுப்ப டையாக.

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன். இப்படி முதுகு ஒடிய வேலை செய்துதான் தீர வேண்டும் என்கிற அளவுக்கு உன்னை நான் ஒட்டாண்டியாக விட்டுவிடவில்லையே'' என் றான் கதிரவன் ஆத்திரத்துடன்.

இல்லைதான். பாங்க் வட்டியே சில ஆயிரங்கள் வருமள வுக்கு அவள் பெயரில் அவன் பணம் 'டெபாசிட்' செய்திருந் தான் தான். ஆனால், அந்தப் பணத்தில் சாப்பிட்டுத் தன்னைத் தானே இழிவுபடுத்திக் கொள்ள அவள் தயாரில்லையே.

சன்னல் அருகே சென்று இருளை வெறித்தவண்ணம் கேட்டாள். ''ஏதோ பேச வேண்டும் என்றீர்கள்?''

சினம் கண்களிலும் ஜொலிக்க, ''அதாவது, 'உன் பணம் இல்லாமலே என்னால் வாழ முடியுமடா, முட்டாள்' என்று சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறாயாக்கும்?'' என்று சீறி னான் அவன்.

''பிளீஸ்...'' என்றாள் சுரபி அலுப்புடன். ''நீங்கள் சொல்ல வந்ததைச் சீக்கிரமாகச் சொல்லி முடித்துவிட்டுக் கிளம்பினீர்களானால் எனக்கு வசதியாக இருக்கும், கதி... கதிர்வன். நான் இதற்குமேல் சமைத்து ஒரு வாய் சாப்பிட்டுப் படுக்க வேண்டும்.''

''இதற்குமேல் சமைத்தா..? எப்போது சமைத்து எப் போது சாப்பிடுவாய்? கிளம்பு. ஏதாவது ஓட்டலில்...''

''தயவு செய்து நீங்கள் வந்த காரியத்தைச் சொல்லி முடிக் கிறீர்களா? வேறு பேச்சு அனாவசியம் என்று நினைக்கி றேன்...''

அன்று என்ன சொன்னான்? இதற்கு மேல் நீ பேசுவதோ, உன் பேச்சை நான் கேட்பதோ அனாவசியம் என்றானே. ஆனால் இவனிடம் பதிலுக்குப் பதில் பேசுவதில் எப்போதும் வேதனைதான் மிஞ்சியிருக்கிறது.

இதோ இதோ என்று கண்ணீர் துருத்துவதை உணர்ந்த சுரபிக்கு உண்மையாகவே அவன் சீக்கிரமாகக் கிளம்பி விட்டால் தேவலை என்றே தோன்றியது. கண்ணீர் பெண்களின் மாய்மாலம் என்றவன் முன்னிலையில் மீண்டும் அழுவதற்கு அவளுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

அவள் அசைவதாக இல்லை என்பதை உணர்ந்தாற் போல அவன் அதற்கு மேல் அவளது உணவு பற்றிய பேச்சை விடுத்தான். ''அப்பாவுக்கு உடம்பு சரியில்லை. மாரடைப்பு'' என்று நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

வெறுமனே அவன் வரக்கூடியவன் இல்லை என்பதால் ஏதோ ஒரு கெட்ட சேதியைச் சுரபி எதிர்பார்த்தே இருந்தாள். ஏற்கனவே எதிர்பார்த்திருந்ததால் செய்தி கேட்டதும் சமாளிப் பதும் சற்று எளிதாகவே இருந்தது.

அவர் என் தகப்பனார். அவருக்குப் பிள்ளையில் லையா, மனைவியில்லையா, மகளில்லையா? அவருக்கு நீ என்ன உதவுவது என்று கதிரவன் முன்பு கேட்டது பசுமரத்து ஆணியாய் மனதில் பதிந்திருந்தபடியால் மனதில் உண்டான சிறு பதைப்பையும் வெளிக்காட்டாமல் மறைத்து, ''அப்ப டியா? சாரி. இப்போது குணமாகி விட்டதல்லவா?'' என்று குசலம் விசாரித்தாள்.

அன்று தான் சொன்னது நினைவு வந்தாற்போலச் சில கணங்கள் அவனும் மவுனமாயிருந்தான். பிறகு, ''கொஞ்சம் பரவாயில்லை. ஆனால் இன்னமும் முழுமையாக அபாய நிலை தாண்டவில்லை...'' என்று அவளிடம் எதையோ எதிர் பார்த்தாற்போல் இழுத்தான்

சுரபி எதுவும் சொல்லுவதாக இல்லை என்று ஆனதும், ''அவர் உன்னைப் பார்க்க விரும்புகிறார்.. நீ வந்தாயென்றால் நன்றாகயிருக்கும்... வர வேண்டும்'' என்று மீண்டும் இழுத் தான்.

''ஏன்?''

''சுரபி, நீ அன்றையப் பேச்சை நினைக்கிறாய் என்று தெரிகிறது. ஆனால்.. சொன்னவன் நான், சுரபி. எனக்குப் பாடம் கற்பிப்பதாக எண்ணி அப்பாவைத் தண்டித்து விடாதே. அவர்.. அவர்.. உண்மையாகவே உன் மேல் அன்பு வைத்தவர். ப்ளீஸ்''

கெஞ்சுவது அவனுக்குப் பழக்கம் இல்லை. ஆனால் இதற்குள்ளாகவே கண்ணீரை அடக்கமாட்டாமல் சுரபி தத்த ளித்துப் போனாள். கையைத் தூக்கித் கண்ணீரைத் துடைத் தாலோ, திரும்பினாலோ அழுவது அவனுக்குத் தெரிந்து விடும் என்று வெளியே பார்த்தபடி அப்படியே நின்றாள்.

தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு, ''நா..ன்.. நான் வந்து என்ன செய்து விடப் போகிறேன்? நான் ஒன்றும் டாக்டர் அல்லவே'' என்றாள் மறுப்பாக.

''இல்லைதான். ஆனால் உன்னை நினைத்து வேதனைப் பட்டே உடம்பைக் கெடுத்துக் கொள்கிறார். உனக்கு... உனக்கு அநியாயம் செய்து விட்டதாக... உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று...''

எவ்வளவோ அடக்க முயன்றும் மீறி வெளிவந்த ஒரு சிறு விசிப்பு சத்தம் அவளைக் காட்டிக் கொடுத்தது.

இரண்டெட்டில் அவளை அணுகியவன் சட்டென அவ ளைப் பற்றித் தன்புறம் திருப்பினான். அவளது கண்ணீரைக் கண்டு ஒருதரம் கண்மூடித் திறந்தவன் அவளை மார்பில் சாத் திக் கொள்ள முயன்றான்.

ஆனால் ஏற்கனவே பலவீனப்பட்டிருக்கும் மனது, இது போன்று அர்த்தமற்ற பரிவுச் செய்கையில் தன்னை இழந்து விடக்கூடும் என்று அஞ்சிய சுரபி, கணவன் பிடியிலிருந்து விலகி உள்ளே சென்றாள். முகத்தில் நன்றாக நீர் அடித்துக் கழுவி, முகத்தை, மனதை அமைதியாக்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

இதற்குமேல் ஒன்றும் உணராதது போலக் காட்டுவது கடினம் என்று உணர்ந்து, ''எனக்கு அதிகமாக லீவு எடுக்க முடியாது. கதி... கதிரவன். மிஞ்சி மிஞ்சி ஒரு வாரம். அதற்கு மேல் வேலை செய்யும் இடத்தில் ஒத்துக் கொள்ள மாட்டார் கள்'' என்று உரைத்தாள்.

''அந்த வேலைதான் ஏன் என்று...'' வேகத்துடன் தொடங்கிய கதிரவன், அவளது நேரான பார்வையில் அந்தப் பேச்சை விடுத்து, மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தான். ''இதற்குமேல் சமைத்து உண்பது முடியுமா?'' என்று வினவி னான்.

''அவசியம் இல்லை. கொஞ்சம் 'பிரெட்' இருக்கிறது. அதைச் சாப்பிட்டுக் கொள்வேன்'' என்றாள் சுரபி அசிரத்தை யாக.

சட்டெனத் திரும்பி நடந்தவன், கதவருகில் நின்று ''கத வைப் பூட்டி விடாதே. இதோ வருகிறேன்'' என்று அவளது பதிலுக்குக் காத்திராமல் மடமடவென்று படி இறங்கிச் சென் றான்.

விரைவிலேயே திரும்பி வந்த போது அவன் கைகளில் சில பொட்டலங்கள் இருந்தன. ''தோசை, இட்டிலி, சப்பாத்தி, சட்டினி, சாம்பார், குருமாவை ஓட்டலில் பாலிதீன் பையில் கட்டிக் கொடுத்தார்கள். இவன் வாங்கித் தந்ததைச் சாப்பிடு வதா என்று பட்டினி கிடக்காமல் தயவு செய்து சாப்பிடு... நான் நாளைக் காலையில் வருகிறேன்... ஆனால் பிளீஸ், சாப்பிட்டு

விடு'' என்று கூறிப் பொட்டலங்களை அலமாரித் தட்டில் வைத்து விட்டு மடமடவென்று வெளியேறிச் சென்று விட் டான்.

அவனது கார் கிளம்பிச் செல்லும் ஒலி அடங்கும் வரை அசையாமல் நின்றாள் சுரபி.

அவன் வாங்கி வந்தது வேண்டாம் என்று சுரபி ஒதுக்கி விடவில்லை.

அவளுக்கு நிறைய வேலை செய்ய வேண்டியிருந்தது. இந்தத் திடீர்ப் பயணத்துக்குத் தேவையான துணிமணிகள் எடுத்து வைக்க வேண்டியிருந்தது. ஒரு சிலதைத் துவைத்துக் காயவைத்துக் கூடத் தயார் செய்ய வேண்டியிருந்தது. வீட்டுக் குடையவளிடம் சொல்ல வேண்டியிருந்தது. திரும்பி வருவ தற்குத் தயாராக வீட்டை ஒதுக்க வேண்டியிருந்தது.

முக்கியமாகக் கணவனைக் கண்டதில் அதிர்ந்து போயி ருந்த மனதைச் சம நிலைக்குக் கொண்டு வர வேண்டியிருந்தது.

இதையெல்லாம் பசித்த வயிறு என்கிற பலமான எதி ரியை வைத்துக் கொண்டு செய்ய முடியாது என்று அறிந்திருந் ததால் அந்த உணவை உண்டு விடத்தான் முயன்றாள். ஆனால் தொண்டைக்குள் பந்தாய் அடைத்த துக்கம் அவளை வயிறு நிறைய உண்ணவிடவில்லை.

3

உண்ண இயலாதது போலவே சுரபியால் உறங்கவும் முடியாது போயிற்று.

எப்படியோ கொஞ்சம் கொஞ்சமாக மறக்க முயன்று, மறக்க முடியாவிட்டாலும் ஒதுக்கி, வேறு நினைக்க முடிகிற அளவுக்கு வந்திருந்தாள். இன்று ஒன்றும் முடியாமல் கடந்த காலத்திலேயே வாழும்படி ஆயிற்று.

ஒன்றரை வயதுக் குழந்தைகளைக் கண்டால் எப்போதுமே சுரபிக்கு மனம் உருகிப் போகும். ஏனெனில் அவளது அந்தப் பிராயத்தில் தான் ஒரு விபத்தில் அவளுடைய பெற்றோர் இருவரும் இறந்து விட அவள் மட்டும் பிழைத்தாள். பெண் குழந்தையின் பொறுப்பேற்று, பின்னர் அவதிப்பட உறவினர் மறுத்து விட்டதால், கோர்ட் உத்தரவின்படி அவள் அனாதை இல்லத்தில் சேர்க்கப்பட்டாள்.

அப்போது நடந்த எதுவும் அவளுக்கு நினைவு வராத போதும், அவ்வப்போது கற்பனை செய்து பார்ப்பாள். பழக்கப்பட்டிருந்த தாயின் அரவணைப்புக்காக அந்த ஒன்றரை வயதுக் குழந்தை எப்படி ஏங்கியிருக்கக் கூடும். அவளைக் காணாத காரணம் புரியாமல் எப்படித் தவித்திருக்க வேண்டும் என்று எண்ணும் போதே அவளது உடல் சிலிர்த்துப் போகும்.

ஆசிரமத்திலேயே வளர்ந்து, எல்லோருடனும் பிரியமும் உரிமையுமாகப் பழகத் தொடங்கிய பிறகு அங்கே வெகுகாலமாகப் பணிபுரிந்த சிலரிடம் விசாரித்த போது அவர்களும் அதையே தான் சொன்னார்கள்.

''அம்மா, அம்மா என்று கதறிக் கதறி உனக்குத் தொண்டையே கட்டிப் போகும். பாவமாகத்தான் இருக்கும். ஆனால் எங்களுக்கு நீ ஒரே குழந்தையாம்மா, உன்னையே தூக்கி வைத்துக் கொண்டிருக்க? அனேக சமயம் கண்டும் காணாதது போலத்தான் போக வேண்டியிருக்கும்... ஆனால் நீ அப்போதே கெட்டிக்காரி. அம்மா வராத இடம் போய் விட்டாள் என்று சீக்கிரமே புரிந்து கொண்டு சாதாரணமாக இருக்கத் தொடங்கி விட்டாய்''

அன்றிலிருந்து தினமும் இரவில் படுக்குமுன் ''இந்த மாதிரித் துயரம் இனி எந்தக் குழந்தைக்கும் நேர விட்டு விடாதே, முருகா'' என்று வேண்டிக் கொள்வாள் சுரபி.

அன்பின் இழப்புக்கு ஈடு செய்வது போல இறைவன் சுரபிக்கு அறிவை அள்ளிக் கொடுத்திருந்தார். உபகாரச் சம்பளங்களிலேயே படிப்பை முடித்துப் பட்டம் பெற்றாள்.

அதிகப்படித் தகுதியாக 'டைப்ரைட்டிங்', 'ஷார்ட் ஹான்ட்' படித்தாள். ஒரு 'செகரட்டரி கோர்ஸ்' முடித்தாள்.

இவை அனைத்தையும் விட, பல பேச்சுப் போட்டிகளிலும் பட்டிமன்றங்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற்றதன் விளைவாகவே அவளுக்கு விரைவாக வேலை கிடைத்தது.

'பூமிநாதன் கன்ஸ்ட்ரக்ஷ'னில். அதன் விற்பனைப் பிரிவில்.

''அப்பாவின் பெயரிலேயே பூமி இருப்பதாலோ என்னவோ, ''குடும்பத்தின் மற்ற தொழில்களை விட அவருக்கு இந்த 'ரியல் எஸ்டேட்' தொழிலில் ஈடுபாடு அதிகம். என் தங்கைக்குக் கூடப் பூமா என்று பெயர் வைத்திருக்கிறார் என்றால் பாரேன்'' என்று அவளது விரல்களை வருடி விளையாடியபடியே, திருமணமான புதிதில் கதிரவன் ஒருதரம் அவளிடம் கூறியதுண்டு.

பூமிநாதனின் இந்தத் தொழில் பற்றி பேச்சைத் தொடர சுரபிக்கு விருப்பம் இல்லை. அது அனாவசியமான குப்பைகளைக் கிளறி விட்டு விடக் கூடாது என்று எண்ணினாள். ''பர்வதராஜன் மகள் பார்வதி போலப் பூமிநாதன் மகள் பூமாவா?'' என்று வேடிக்கை பேசிப் பேச்சை மாற்றினாள்.

மகா சாமர்த்தியமாகப் பேச்சைத் திசை திருப்பி விட்டதாக உள்ளுரப் பெருமை வேறு.

பெருமைப்பட்டாலும் அடிமனதில் ஒரு வருத்தமும் இருக்கவே செய்தது.

தாலிகட்டிய கணவனிடம் ஒளிவு மறைவற்று உண்மை உரைக்க முடியவில்லையே என்று உள்ளே முனைமுறிந்த முள்போல, சதா உறுத்திக் கொண்டே தான் இருந்தது.

ஆனால் உண்மையைச் சொன்னால் அதை அதற்குரிய விதமாய் ஏற்கக்கூடிய மனஇயல்பு அவனுக்கு இருக்கிறதா, இல்லையா என்று நிச்சயப்படுத்திக் கொள்ளாமல் அவனிடம் அதை சொல்லவும் அச்சம். எனவே அதைச் சொல்லாமலே பேசாதிருந்தாள்.

ஆனால், இப்பொழுது தோன்றுகிறது. கதிரவனிடம் அப்போது அவள் சொல்லியிருக்கலாமோ என்று.

''முதலில் உங்கள் தந்தையின் 'ரியல் எஸ்டேட்' நிறுவனத்தில்தான் நான் வேலை பார்த்தேன். பிறகு அவர் சொல்லித்தான் உங்களிடம் வேலைக்குச் சேர்ந்தேன்'' என்கிற அளவாவது சொல்லியிருக்கலாம்.

சொல்லியிருந்தால் கதிரவனின் பெரும் குற்றச்சாட்டு, உண்மையை மறைத்து அவனை ஏமாற்றினாள் என்பதேனும் அடிபட்டுப் போயிருக்கும். ஏன் மறைத்தாள் என்கிற எண்ணமே தோன்றியிராதோ என்னவோ?

ஆனால் ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் எனும் சிலப்பதிகார நீதிக்கிணங்க, சுரபி எந்தெந்தப் பிறவிகளில் எல்லாமோ செய்த தீவினைப் பயன் அத்தனையும் ஒன்று சேர்ந்து வந்தல்லவா அப்போது அவளது வாயைப் பொத்தியிருக்கிறது!

அங்கங்கே நிலங்களை வாங்குவதிலும், வாங்கியதும் அது இருக்கும் சூழலுக்குத் தகுந்தபடி அங்கே ஆடம்பர வீடுகளோ, அடுக்கு மாடிக் கட்டிடங்களோ கட்டி விற்பதில் பூமிநாதன் மன்னன்.

அவருக்கு மிகவும் பிரியமான தொழிலும் இதுதான்.

போட்டி கம்பெனிகள் மோப்பம் பிடித்து வருமுன் நல்ல இடங்களை வளைத்துப் போட்டு விடுவதிலும், எப்படியாவது முதலில் அறிவித்த காலத்திற்குள்ளாகவே வீடுகளைக் கட்டி முடிப்பதிலும் அவருக்கு உற்சாகம் அதிகம். ரொம்பவும் முடியாத காலங்களில்தான் வீடு கட்டுவதில் தாமதம் நேர்வதுண்டு. ஆனால் அதற்கும், அந்த வீடுகளில் வரக்கூடிய வாடகையைப் பணமாகக் கஸ்டமருக்குக் கொடுத்து விடுவார்.

இதில் அடிக்கல் நாட்டு முன்பாகவே, அந்த இடத்தில் எழும்பக்கூடிய வீடுகளை விற்பனை செய்யும் பிரிவில் தான் சுரபி முதலில் வேலை பார்த்தாள்.

அவளது பேச்சுத் திறமையால், 'சிக்கலான கஸ்டமரா, கூப்பிடு சுரபியை' என்கிற அளவுக்கு விரைவிலேயே உயர்ந்தாள்.

அன்று ஒரு கஸ்டமர், பிளாட் வாங்க வந்தவர், என்ன சொல்லியும் அவரை ஒத்துக் கொள்ள வைக்க முடியவில்லை. மற்றவர்கள் எல்லோரும் முயன்று பார்த்து விட்டு வெற்றிகரமாகப் பின்வாங்கி விட்டனர்.

இவரால் வாங்க வந்திருந்த வேறு நாலைந்து பேரும் திரும்பி விடுவார்கள் என்பது போன்ற நிலைமை.

மற்ற விலை விவரங்களுக்கு அவர் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இன்றைக்கு நியாயமான விலைதான் என்று ஒத்துக் கொண்டார்தான். ஆனால், ''கட்டி முடிக்க ஒன்றரை ஆண்டு ஆகும் என்கிறீர்கள். அதற்குள் நான் படிப்படியாக, விலை மூன்று இலட்சத்தையும் கட்டி முடித்தாக வேண்டும்.

எல்லாம் சரிதான். ஆனால் ஏதாவது காரணத்தால் வீட்டைக் கையில் தரத் தாமதம் ஏற்பட்டால், அந்தக் காலத்துக்கு வீட்டு வாடகை மாதிரி ஆயிரம் ரூபாய் மட்டும் தருவதாகச் சொல்லுகிறீர்களே! நீங்கள் என்ன பிச்சையா போடுகிறீர்கள்? இந்த மூன்று இலட்சத்தையும் பாங்கில் போட்டால் பதினாலு

சத வட்டியாக மாதம் மூவாயிரத்து ஐநூறு வரும் தெரியுமா? நீங்க இரண்டாயிரத்து ஐநூறு சுருட்டப் பார்க்கிறீர்கள்'' என்று சத்தம் போட்டார்.

மற்றவர்கள் விழிக்கவும் சுரபி அவரிடம் சென்றாள். ''சார், ரொம்பச் சத்தம் போட்டுக் கத்தாதீர்கள், சார். பிரசர் வந்து உடம்பு கெட்டு விடும்'' என்று மிடுக்காய்த் தொடங்கி அவரைத் திகைக்க வைத்தாள்.

திகைப்பு மாறி அவர் உணர்ச்சிவசப்படும் முன், ''உங்கள் நலத்துக்காகத்தான் சொன்னேன், சார். தப்பாயிருந்தால் மன்னித்து விடுங்கள்'' என்று உடனே பணிந்தாள்.

மீண்டும் அவர் பேசத் தொடங்குமுன், ''நீங்கள் கேட்டது நல்ல கேள்வி சார். ரொம்பக் கெட்டிக்காரர்களுக்கு மட்டுமே தோன்றக்கூடிய கேள்வி'' என்று ஐஸ் வைத்தாள்.

இவள் என்ன சொல்ல வருகிறாள் என்று அவர் குழம்பு கையில், ''ஆனால் சார் சில விஷயங்களை யோசிக்க மறந்து விட்டீர்கள்.. ரொம்பச் சின்ன விஷயம் என்பதால் உங்கள் மனதில் படவில்லை என்று நினைக்கிறேன்... பாருங்கள் சார், நீங்கள் சொன்ன மாதிரி பாங்கில் பதினாலு சதவீதம் வட்டி தருகிறார்கள் என்பது மெய்தான். ஆனால் அப்படி இருந்தும், பணத்தை பாங்கில் போட்டு விட்டு ஜாலியாக வட்டியை வாங்கிச் சாப்பிடாமல் ஏன் சார் எல்லாரும் வீடு, நிலம் என்று அலைகிறார்கள்? வெறும் பணமாய் வைத்திருந்தால் அதன் மதிப்பு குறைந்து கொண்டே போய் விடும் சார். ஐந்து ஆண்டுகளில் பாதியாகி விடும்.

ஆனால் வீடு அப்படியா சார்? இன்றைக்கு உள்ள விலையான மூன்று இலட்சம்தான். அதையும் படிப்படியாகத்தான் நீங்கள் கட்டப் போகிறீர்கள். ஒன்றரை ஆண்டுகளில், இந்த வீட்டை உங்களிடம் ஒப்படைக்கிற போது அதன் மதிப்பு நாலு இலட்சமாகி விடுமே. அந்த ஒரு இலட்சம் உங்களுக்கு லாபமில்லையா, சார்? அந்த ஒரு இலட்சமும் லாபம். அதற்கு மேல் மாதம் ஆயிரம் ரூபாயும் லாபம்''

''சார், எங்கள் முதலாளிக்கு இருக்கும் செல்வத்துக்கு இந்த வீடுகளை அவரே மூன்று இலட்சம் செலவு செய்து கட்டி, நாலு இலட்சத்துக்கு விற்றுச் சுளையாக ஒரு இலட்சம், வீட்டுக்கு ஒரு லட்சம் என்றால் நூறு வீடுகளுக்கு எவ்வளவு என்று பாருங்கள் - அவ்வளவு லாபம் தட்டலாம். ஆனால் அவர், நம்மைப் போல மத்தியதர மக்களுக்குச் சொந்த வீடு கிடைக்க வேண்டும். அதில் நட்டப்பட்டாலும் பரவாயில்லை என்று ஒரு பரோபகார சிந்தையில் செய்தால் அதைப் போய்க் குறை சொல்லலாமா, சார்'' என்று கணக்கில் தொடங்கி உருக்கத்தில் முடித்தாள்.

அவ்வளவுதான். ஒரு வீட்டுக்கு வந்தவர் இரண்டு பிளாட்டுக்குச் 'செக்' கொடுத்து விட்டுப் போனார். மற்றவர்களும் வாங்காமல் போகவில்லை.

சிரிப்பும் கேலியுமாக மற்றவர்கள் பாராட்டிய போது சுரபி மகிழ்ந்தாள்.

ஆனால் இரண்டு நாட்களுக்குப் பிறகு, தன் கேபினுக்கு வரச் சொல்லிப் பூமிநாதன் அவளிடம் பேசிய போதுதான், அவரும் தன் பேச்சைக் கேட்டிருக்கிறார் என்று அவளுக்குத் தெரிய வந்தது.

''அன்று உன் பேச்சைக் கேட்டேன், சுரபி. அழகாக, தெளிவாக, கெட்டிக்காரத்தனமாகப் பேசினாய். முக்கியமாக அவருக்குப் புரியும்விதமாய்ப் பேசி நம்ப வைத்தாய், என் பாராட்டுக்கள்'' என்று முதலாளி கூறவும், சுரபி வானத்தில் மிதந்தாள்.

''நன்றி சார்'' என்றபோது விழிகள் ஒளிசிந்தின.

பூமிநாதன் மேலே பேசினார். ''உன் பைல் பார்த்தேன், நீ படித்த கல்லூரியில், வளர்ந்த ஆசிரமத்தில் விசாரித்தேன்.

உன் கெட்டிக்காரத்தனத்துக்கு நீ இருக்க வேண்டிய இடம் இது அல்ல.''

சுரபியின் தலை சுழன்றது. ரொம்பவும் நாசூக்காக வேலையை விட்டு விலக்குகிறாரோ என்று உள்ளூர அஞ்சினாள்.

''உனக்குப் பதவி உயர்வு கொடுக்கலாம் என்று இருக்கிறேன். ஆனால் இருக்கிற நாலு பெண்களில், கடைசியாக வந்த உனக்குப் பதவி உயர்வு கொடுத்தால் மற்றவர்களின் ஊக்கம் குன்றக்கூடும். வீண் சச்சரவுக்கும் இடம் உண்டாகும். அதனால் எனது இன்னொரு கம்பெனியில், எம்.டி.யின் செகரட்டரியாக உன்னை நியமிக்கலாம் என்று இருக்கிறேன்'' என்று கூறி மீண்டும் அவளது முகம் மலரச் செய்தார் அவர்.

எம்.டி.யின் செயலாளர்!

பெரிய - அவளது தகுதிக்கு மிகப் பெரிய பதவி கிடைக்கப் போகிறது என்றதும் முதலில் தோன்றிய மகிழ்ச்சியை அடுத்து, தன்னால் முடியுமா என்கிற பயம் வந்தது.

முதலில் சற்றுத் தடுமாறினாலும் முயன்றால் முடியாதது இல்லை என்கிற தன்னம்பிக்கையை அடுத்து சந்தேகம் வந்தது.

சுரபி ஒரு 'செகரட்டரி கோர்ஸ்' படித்திருந்தாள்தான். ஆனால் அவளது அதிகப்படியான தகுதி, பல பேச்சுப் போட்டிகளில் வென்றதுதான். விற்பனைப் பிரிவுக்கு அதிகம் தேவைப்படுவது வாய்சாலகமாக இருக்கலாம். ஆனால் எம்.டி.யின் செயலாளருக்கு வெறும் பேச்சுத் திறமை மட்டும் போதாதே!

இதில் வேறு ஏதோ இருக்கிறது.

ஐயத்துடன் பூமிநாதனை நோக்கினாள் அவள்.

பெரியவரின் பார்வை மேசை மேலிருந்த 'பேப்பர் வெயிட்'டில் பதிந்த விதம் அவளது ஐயப்பாட்டை உறுதிப்படுத்தியது.

ஒருகணம் யோசித்து விட்டு, ''வேலை மட்டும் என்றால் அது எவ்வளவு அதிகமாக இருந்தாலும் கடுமையாக உழைக்க என்னால் முடியும் சார். ஆனால் உளவு மாதிரி என்றால் அதற்கு நான் சரிப்பட மாட்டேன் சார்'' என்றாள் தெளிவான குரலில்.

சிறு பாராட்டுதலுடன் கூடிய பார்வை அவளை நேராக நோக்க, ''அந்தக் கம்பெனியின் எம்.டி. என் மகன், அவனை உளவு பார்க்க நேருமளவுக்கு அவனோ நானோ தரம் கெட்டவர்கள் அல்ல, சுரபி'' என்றார் அவரும் நிதானமாக. ''ஆனால், நீ சந்தேகப்பட்டது போலவே வெறும் செயலாளர் வேலைக்காக நான் உன்னை அங்கே அனுப்பவில்லை...''

சுரபி கவனத்துடன் கேட்டிருக்க, ஒரு சிறு அமைதியின் பின் பூமிநாதனே தொடர்ந்தார். ''வீட்டு விவகாரங்களை அம்பலத்துக்குக் கொண்டு வருவது எனக்குப் பிடிக்காதுதான். ஆனால் முழுவிவரம் அறியாமல் நீ எனக்கு எந்த உதவியும் செய்ய முடியாது. நான் கூறப்போகும் இந்த விவரங்கள் உன்னைத் தாண்டி வெளியே செல்லாது என்கிற உறுதியை நீ எனக்குத் தர வேண்டும்.

சுரபி ஒத்துக் கொண்டதும் அவர் மேற்கொண்டு விவரம் தெரிவித்தார்.

பூமிநாதனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தனர். முதல் மனைவியின் மூலம் பிறந்த மகன் கதிரவன். மகன் பிறந்த போது முதல் மனைவி இறந்துவிட, சிலகாலம் கழித்து மீண்டும் மணம் செய்தார். தனக்கென்று ஒரு மகள் பிறந்த பிறகும் கதிரவனைச் செல்வநாயகி நல்லபடியாகத்தான் நடத்தினாள். குடும்ப வாழ்வு சீராகச் சென்றது.

ஆனால் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக, மகன் கதிரவனின் இருபத்தி நாலாவது பிறந்த நாளோடு எல்லாம் மாறி விட்டது.

அன்றிரவு தந்தை, தாய், மகன், மகள் நால்வருமாகக் கோவிலுக்குச் சென்று திரும்பிய போது, வீட்டில் ஒரு குடும் பம் காத்திருந்தது. அசிங்கமான ரகளை. அவர்கள் வீட்டுப் பெண்ணோடு கதிர் தவறான உறவு கொண்டதில் அவள் கரு வுற்றிருப்பதாகவும், அவளுக்கு ஒரு வழி சொல்ல வேண்டும் என்றும் அந்தப் பெண்ணின் பெற்றோர் கூறினர். கதிர் அதை ஒத்துக் கொள்ளவில்லை. சில சமயம் நண்பர்கள் கூடுகையில் அவளும் வரப் பார்த்தது தவிர வேறு தொடர்பு இல்லை என்றான் அவன்.

வந்திருந்தவர்களின் முகவரியைக் கேட்டதும் கணவரை ஒரு குறிப்புப் பார்வையால் அழைத்து செல்வநாயகி உள்ளே சென்றாள். தொடர்ந்து வந்த பூமிநாதனிடம், கதிரவன் அந்த வீட்டுக்குச் சென்று வருவது உண்மையே என்றும், முடிந்த அளவு இருவருக்கும் திருமணத்தை முடிப்பது நல்லது, அல் லது வந்திருந்தவர்களுக்கு ஏதாவது பணம் கொடுத்து அனுப்ப வேண்டும் என்றாள் அவள்.

ஆனால் கதிரவன் பிழையை ஒப்புக் கொள்ளவே இல்லை. அவன் சார்பில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, மகன் செய்த பிழைக்கு ஈடாக என்று பூமிநாதன் ஒரு இலட்சம் ரூபாயை அந்தப் பெண்ணின் பெற்றோரிடம் கொடுக்கவும் அவன் ஆவேசம் கொண்டு விட்டான். தன்னை நம்பாத உறவு களை உறவென்று எண்ணக்கூட அவமானமாக இருப்பதாகக் கூறி வீட்டை விட்டு வெளியேறி விட்டான். அவனுடைய தாய் வழிச் சொத்துக்களில் ஒன்றான பிளாட் ஒன்றில் இப்போது வசித்து வருகிறான். தொழில் ரீதியான தொடர்புகள் தவிர வேறு எந்தவித நெருக்கத்துக்கும் அவன் இடம் கொடுப்பது இல்லை.

அவனுடைய தங்கை பூமா மட்டும் விதிவிலக்கு. அவளி டமும் உருகி வழிவதை விட்டு விட்டான்தான். ஆனாலும் அவளாகச் சென்று பார்த்தால் விரட்டுவது இல்லை...

பெரியவர் தன்னிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பது ஓரளவுக்குப் புரிந்தது சுரபிக்கு. ஆனால் இந்த மாதிரி ஒரு மட்டரக மனிதனிடம் அவனது சொந்த வாழ்வு பற்றி அவளால் எப்படிப் பேச முடியும்? அதுமட்டுமல்ல. அவன் அருகே செல்வதே பெண்ணான அவளுக்கும் ஆபத்து அல்லவா?

அவள் மறுக்கத் தொடங்குமுன் பூமிநாதன் மேலே பேசி னார்.

விரைவிலேயே மகன் மீது பிழையில்லை என்பது தெரிய வந்ததாம். வயிற்றுக்குள் நெருப்பை அடக்கி, வாயினிக்கப் பேசுவார்களே, அந்த மாதிரி சினேகிதி ஒருத்தி செல்வநாய கிக்கு, செல்வநாயகியின் ஆனந்த வாழ்வில் பொறாமை கொண்டிருந்த அவள், தன் உறவுக்காரர்களோடு சேர்ந்து சதி செய்திருக்கிறாள். செல்வநாயகியிடம், கதிரவனை அடிக்கடி அந்த வீட்டில் காண்பதாகக் கூறியிருக்கிறாள். பின்னோடு இப்படி ஒரு ரகளை செய்யும்படி உறவுக்காரர்களை அனுப்பி விட்டாள். திருமணமானால் சொத்தில் பங்கு, பணமாகக் கிடைத்தால் அதில் பங்கு என்று பேச்சாம்.

இது விவரம் செல்வநாயகிக்குத் தெரிய வந்தது சமீபத் தில் தான். ஆனால் அதற்கு முன்னதாகவே அந்தப் பெண் ணின் தகப்பனாரை வேறுவிதமாய் அணுகி உண்மை தெரிந்து கொண்டு விட்டார் பூமிநாதன். மாற்றாந்தாய்ப் புத்தியைக் காட்டி மகனை விரட்டி விட்டாள் மனைவி என்ற முடிவுக்கு வந்த அவருக்கு மனைவியோடு ஒரே வீட்டில் இருக்க வெறுப் பாகி விடவே, அவரும் வீட்டை விட்டு வெளியேறி இன் னொரு வீட்டில் வசிக்கத் தொடங்கினார்.

சுரபியின் கண்கள் விரியவும், வருத்தமான முறுவலு டன், ''ஆமாம் அம்மா. அப்பனுக்கும் பிள்ளைக்கும் ஒரே

புத்திதான். சகிப்புத்தன்மை, பொறுமை என்று எதுவும் கிடையாது. மூன்று கால் முயலையே பிடிக்கிற புத்தி. நாயகி எவ்வளவோ கெஞ்சினாள், உண்மை அறிந்தபின் கதிரவனிடமும் காலில் விழாத குறையாய் மன்றாடியிருக்கிறாள். என்னிடமும் தான். அதுதான் எங்கள் வீட்டு புத்தி பற்றிச் சொன்னேனே. மறப்பதும் கிடையாது, மன்னிப்பதும் கிடையாது''

''உண்மை தெரிந்தபிறகுமா?''

''என் மகனின் குற்றச்சாட்டே வேறு. யார் வந்து அவன் மீது என்ன குற்றம் சுமத்தியிருந்தாலும், அவன் இல்லை என்ற பின் அவனுடைய குடும்பம் அவன் பின்னேதான் நின்றிருக்க வேண்டும் என்கிறான். அப்படி நிற்காததற்குப் பெயர் குடும்பம் அல்லவாம்''.

அது சரிதான். குடும்பம் என்றால் எந்த நிலையிலும் ஒருவருக்கொருவர் துணை நின்றுதான் ஆக வேண்டும். ஆனால், அப்படி நிற்கவில்லை என்பதற்காகக் குடும்பத்தை உடைத்ததுதான் சரியில்லை என்று நினைத்தாள் சுரபி. மன்னிக்கும் இயல்பும் குடும்பத்துக்குத் தேவைதானே?

''ஓ... இந்த விவகாரத்தின் விளைவாக நீங்கள் மனைவியைப் பிரிந்ததும், பிறகு உண்மை தெரிந்தபின் திரும்பவும் ஒன்றாகி விட்டதும் உங்கள் மகனுக்குத் தெரியுமல்லவா?''

''ஒன்றாகவில்லை'' என்றார் அவர் சுருக்கமாக.

''ஏன்?'' என்றாள் சுரபி வியப்புடன்.

அவன் தனியே வாழும்போது நான் மட்டும் குடும்பத்தோடு சேர்ந்து கொண்டால்.. அது அவனுக்கு அநியாயம் செய்வது போலத் தோன்றுகிறது.

''மகனுக்கு மட்டும் தான் அநியாயம் செய்யக் கூடாது, மனைவிக்கும் மகளுக்கும் அநியாயம் செய்யலாம் என்கிறீர்களா?''

'விடுக்'கென நிமிர்ந்தவர் உடனே சிரித்தார். ''பார், எந்த மாதிரி மடக்கிவிட்டாய். இதேபோல் அவனையும் எப்படியாவது குடும்பத்தோடு சேர்த்து விடம்மா. சிதறிக்கிடக்கிற குடும்பத்தை ஒன்றாக்கி வைக்கும் புண்ணியம் உனக்கு கிடைக்கும்.''

ஒன்றரை வயதில் குடும்பம் சிதறித் தனிமைப்படுத்தப் பட்ட நினைவு வந்தது சுரபிக்கு.

அது மாற்ற முடியாதது. ஆனால் இது அப்படியல்லவே!

4

பூமிநாதன் தன் பங்கு வேலையாக, கதிரவனுடைய காரியதரிசியாகச் சுரபியை எப்படியோ அமர்த்தி விட்டார்.

அவர், தம் மகனிடம் சுரபி பற்றி நேரில் எதுவும் சொல்லியிருக்க முடியாது. ஏனெனில், தந்தை மூலம் வந்தவள் என்று தெரிந்தால், கதிரவன், அவனது சொந்த விஷயம் பற்றி அவள் என்ன பேசினாலும் தவறாகவே எடுத்துக் கொள்ளக் கூடும். அதனால் இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்தவர்களாகக் கதிரவன் முன் காட்டிக் கொள்ளக் கூடாது என்று சுரபியிடம் பூமிநாதன் ஏற்கனவே எச்சரித்திருந்தார்.

ஆனால் அவர் அவளை நன்கு தயார்படுத்தி இருந்தபடியால், கதிரவன் வைத்த தேர்வில் சுரபி எளிதாகவே வெற்றி பெற முடிந்தது.

அவளது பைலில் இருந்து பார்வையை உயர்த்தி அவளை ஏற இறங்கப் பார்த்து விட்டு ஏதோ சொல்ல வாயெடுத்து, அதை விடுத்து மறுவாரமே வேலையில் சேர்ந்து விடச் சொன்னான்.

முதல்படியில் வெற்றிகரமாக ஏறியவள், மேலும் ஏறுவதற்கு அடுத்தபடி கண்ணிலேயே படுவதாக இல்லை.

சும்மா ஒரு பெண், அவளுக்குச் சம்பளம் தருகிற இளைஞனான முதலாளியிடம் போய் அவனது சொந்த விவகாரங்கள் பற்றிப் பேசுவது எளிதல்ல. அப்படிப் பேசினால் அவளைப் பற்றி மட்டமாக மதிப்பிடத் தோன்றிவிடும். மதிப்பிழந்து போனால் அதன்பின் அவளது பேச்சுக்கும் மதிப்பிராது. கல்யாணமானால் பைத்தியம் தெளியும்; பைத்தியம் தெளிந்தால் கல்யாணமாகும் கதைதான்.

அவளிடம் அவன் வேலை வாங்கிய பாங்கு, மற்ற அலுவலர்களை நடத்திய விதம் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்த சுரபிக்குக் கதிரவன் தன் குடும்பத்தினரிடம் காட்டிய கல்நெஞ்சத்தனம் புரிபடவே இல்லை.

'காட்சிக்கெளியன்; கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக் குறும் மன்னன் நிலம்' என்று ஒரு குறள் உண்டு.

அதுபோல தன்கீழ்ப் பணிபுரிபவர்களிடம் இலகுவாகவே பழகி அவர்களின் நன்மை தீமைகளிலும் பங்கெடுத்து, பரிவுகாட்டிப் பழகினான் அவன்.

சுரபியிடமும் அவளது வளர்ப்பு, வாழ்வு முறை பற்றி அவன் பேசுவது உண்டுதான்.

ஆனால் முதலாளியாய் இருந்து கரிசனம் காட்டுவதற்கும் தொழிலாளியாக இருந்து விசாரிப்பதற்கும் வேறுபாடு உண்டல்லவா?

தன் பிரச்சினையை அவள் பூமிநாதனிடம் தெரிவிக்கவும் அவர் அதற்கு ஒரு வழி செய்தார்.

ஒருநாள், அவள் மூலம் மகனிடம் நேரம் குறித்து ஏற்பாடு செய்து கொண்டு, அலுவலகத்துக்கு வந்து மகனிடம் சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டுப் போனார்.

முன்னேற்பாட்டின்படி, அவர் சென்றதும் குறிப்புப் புத்தகம், பென்சில் சகிதம் கதிரவனிடம் சென்றாள் சுரபி. 'சேர்மன்' வந்து பேசிய விவரம் 'ரிப்போர்ட்' தயாரிக்க வேண்டும் அல்லவா? சொல்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

ஒரு கணம் பேசாதிருந்து விட்டு, ''அவர் அலுவலக விஷயமாய் வரவில்லை. சொந்த விஷயமாய்ப் பேச வந்தார்'' என்றான் அவன்.

''சொந்த விஷயமா? அதை உங்கள் வீட்டிலேயே பேசியிருக்கலாமே! அலுவலகம் வருவானேன்?'' என்று குரலிலும் முகத்திலும் பெரும் வியப்பு காட்டினாள் சுரபி. வெகுளித்தனமான வியப்பு.

அவன் பேசாதிருக்கவும், ''அய்யோ!'' என்று விரல்களால் வாயில் போட்டுக் கொண்டாள் சுரபி. ''சாரி சார், சாரி சார் உங்கள் சொந்த விஷயம்.. நான்பாட்டில மக்கு மாதிரி...'' என்று ரொம்பவும் மன்னிப்புக் கேட்டாள்.

அவன் முறுவலித்தான். ''இந்த அளவு மன்னிப்பு கேட்க ஒன்றுமே இல்லை. சுரபி. எல்லாருக்குமே இயல்பாகத் தோன்றக்கூடிய கேள்விதான். ஆனால்... அப்பாவும் நானும் ஒரே வீட்டில் வசிக்கவில்லை''

''ஏன் சார்?'' என்று அவசரமாகக் கேட்டு விட்டு மீண்டும் வாய் மேல் போட்டுக் கொண்டாள் சுரபி. ''சாரி சார். வந்து.. உங்களை மாதிரி ஒரு நல்லவர்.. வந்து வீட்டோடு இல்லை என்றால்... வந்து.. கேட்டதற்கு சாரி சார்'' என்றாள் குழைவாக.

அவன், ''பரவாயில்லை'' எனவும், ''ஒன்று சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே, சார்? சில சமயம் ஒன்றுமில்லாத விஷயம் கூடப் பெரிதாகத் தோன்றி எப்படி எப்படியோ நடந்து கொள்ளத் தூண்டி விடக்கூடும். அப்புறமாய் யோசித்துப் பார்த்தால் விஷயமே இராது. ஆசிரமத்தில் என் நெருங்கிய தோழியோடு நான் ஒரு ஆண்டு காலம் பே

வில்லை. யோசித்துப் பார்த்தால் உப்புப் பெறாத விஷயம். ஆனால் விரோதம் காட்டிப் பழகிவிட்டபிறகு திரும்பவும் சென்று பேசவும் வரட்டு கவுரவம் இடம் தரவில்லை. குடும்பம் ரொம்பப் பெரிய விஷயம் சார். என்னைப் போல எத்தனையோ பேருக்கு அது கொடுப்பினையே இல்லாது போய் விடுகிறது. கிடைத்ததை அற்ப காரணத்துக்காக விட்டு விடக் கூடாது... அதிகப்படியாய்ப் பேசியிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள் சார்'' என்று வாய்ப்பை விடாமல் வேகமாகப் பேசினாள் சுரபி.

''அது உப்பு பெறாத விஷயமில்லை, சுரபி''

இறுகிய குரலில் வாயை மூடச் சொன்ன போதும் இவ்வளவு தூரம் வந்தபின் விட மனம் இல்லை சுரபிக்கு. ''எல்லாம் பார்க்கிற விதத்தில் இருக்கிறது சார். தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும் என்பது போல. அனுபவிக்கிறவர்களுக்குப் பெரிதாகத்தான் சார் தெரியும். ஆனால் நூற்று நாலு டிகிரி காய்ச்சலோடு தலைவலியை ஒப்பிட்டு, ஒன்றுமில்லை என்று ஒதுக்கச் சம்பந்தப்பட்டவர்களால் தான் முடியும். விஷயம் என்ன என்று சொன்னீர்களானால்... நானும் அதை எடை போட்டு உண்மை மதிப்பை உங்களுக்குச் சொல்ல முடியும். சார், குடும்பம் என்பது பெரிய விஷயம் சார். நிழலின் அருமை வெயிலில் நிற்பவர்களுக்குத்தான் தெரியும். நான் பாலை நிலத்தில் வளர்ந்தவள் சார். ஒரு பசுமரம் சாய்வது என்றால் தாங்கவில்லை. அதனால்தான் கேட்கிறேன்...''

தன் வாக்கு வன்மை முழுவதையும் காட்டி அவனை இளக வைத்தாள்.

அன்றே முழுவதும் இளகி விடவில்லை என்றாலும் எறும்பூரக் கல் தேய்ந்தது.

சொந்த விஷயம் பற்றித் தடையின்றிப் பேசுகிற நிலை வந்தது. அவனது வாக்குமூலம் பூமிநாதன் சொன்னதிலிருந்து மாறுபடவில்லை.

''நான் அவர்களுடைய மகன். தவறே செய்திருந்தாலும் என் பின்னே நிற்க வேண்டியவர்கள் அவர்கள். அப்படியிருக்க, நான் இல்லை என்று சொன்னபிறகும், ஏதோ பெரிதாக நியாயம் செய்வதாக எண்ணி ஒரு லட்சத்தை ஏமாந்து விட்டார்கள். பணம் போகிறது. இன்று போனால் நாளை சம்பாதித்துக் கொள்ளக் கூடியது. ஆனால் மனம்? நம்பவில்லை என்று காட்டி அதை உடைத்து விட்டார்கள். அதன் பிறகு அதே வீட்டில் அவர்கள் முகத்தைப் பார்த்து எப்படி வாழ்வது?''

''இது உங்கள் தந்தை இந்த இந்திய மண்ணில் பிறந்ததால் வந்த வினை'' என்றாள் சுரபி.

அவன் கேள்வியாய் நோக்கவும், ''நிஜம் தான், சார். ரொம்ப ரொம்ப முன்காலத்திலிருந்தே - யுகக் கணக்கில் முன்காலம், சார் மகன்களுக்குத் தந்தைமார் அநியாயம் செய்வதும், அந்த அநியாயத்தினாலேயே அவர்கள் நீதிமான்களாகப் போற்றப்படுவதும் பழக்கமாகி விட்டது'' என்று தொடங்கினாள் சுரபி.

''மனுநீதிச் சோழன் கதையை எடுத்துக் கொள்ளுங்கள், சார். ஆடு மாடுகளைக் கொன்று சாப்பிடலாம், ஆனால் அந்தச் சோழனுடைய மகன் - பாவம். அவன் பெயர் கூட அலட்சியப்படுத்தப்பட்டு விட்டது - அவன் தேர்க் காலில் ஒரு பசுங்கன்று மாட்டிக் கொண்டு செத்து விட்டதென்று, அவன் மீதே- சொந்த மகனின் மேலேயே தேர் ஏற்றிக் கொன்று நீதி நிலை நாட்டியதாக அந்தச் சோழனை நியாய தேவதை என்றுதானே சரித்திரம் பாராட்டுகிறது. அடுத்து ராமர் கதையை எடுத்துக் கொள்ளுங்கள். மையல் மயக்கத்தில் கைகேயிக்குத் தசரதன் வரம் கொடுத்த பிழையையே, பட்டத்துக்குரிய மகனை காட்டுக்கு அனுப்பியேனும் அந்த வாக்கைக் காப்பாற்றி சத்திய சந்தத்தனம் மறக்கடித்து, அவரைப் போற்றிப் புகழ வைத்து விட்டதே. அங்கேயும் மகனுக்குச் செய்த அநியாயம் ஒதுக்கப்பட்டு விட்டதல்லவா?''

''பெற்ற மகனுக்கு அநீதி செய்யப்பட்டாலும் அது பெரிய விஷயமில்லை; இந்த அப்பாமார் அந்தச் சமயம் நியாயம் என்று படுவதைச் செய்ய வேண்டும் என்றுதானே போதனை? பாவம், உங்கள் அப்பா. இந்த மாதிரி ஒரு சூழ்ச்சி செய்திருக்கக் கூடும் என்று எண்ணவில்லை, அவரும் பெண்ணைப் பெற்றவர் ஆயிற்றே, ஒரு சின்னப் பெண்ணின் வாழ்வு எனவும் பதறி விட்டார். அந்தப் பதட்டத்தில் நிதானம் இழந்து யோசிக்கும் போது எடுத்துக்காட்டுகளாக இந்த மனுநீதிச் சோழனும் தசரதனும்தான் நினைவில் வந்திருப்பார்கள். அவர்கள் செய்த நியாயத்தை இவரும் செய்து விட்டார். பாவம்! தந்தையின் கட்டளைக்காகத் தேர் முன்னே படுத்த மனுநீதிச் சோழனுடைய மகன் போலவே, 'அன்றலர்ந்த தாமரை' போன்ற முகத்துடன் காட்டுக்குச் சென்ற ராமன் போலவே நீங்கள் நடந்து கொள்ளாதது கூட அவருக்கு அதிர்ச்சியாய்த் தான் இருந்திருக்கும்! நீங்களானால் அவரை எதிர்த்து, வீட்டை விட்டு வெளியேறி, அவருக்கே தண்டனை கொடுத்து விட்டீர்களே! பரிதாபம்!'' என்று பேசி முடித்தாள்.

புருவங்களை உயர்த்தித் தலையசைத்தான் கதிரவன். ''பட்டிமன்றங்கள், பேச்சுப் போட்டிகளில் உன்னை எதிர்த்து வாதாடியவர்களை நினைத்தால் எனக்கு இரத்தக் கண்ணீர் வருகிறது'' என்று நகைத்தான்.

'அதிகப் பிரசங்கி' என்று அதட்டாமல், அவன் சிரித்ததே பெரும் ஆறுதலாக இருந்தது சுரபிக்கு.

இவ்வளவு அழகாகச் சிரிக்கக் கூடியவன் அடிக்கடி நகைத்தால் எவ்வளவு நன்றாகயிருக்கும்? அப்படிச் சிரிப்பதைப் பார்த்துக் கொண்டே இருக்கும் பாக்கியம் கிடைத்தால்.. சட்டென சுதாரித்தாள் சுரபி. மூட மனது என்பது மெய்தான். எப்படி எப்படி ஓடுகிறது?

மனதை அடக்கி நிறுத்தி எண்ணி வந்த வேலையில் கவனத்தைச் செலுத்தினாள். வாய்ப்பை விட்டு விடாமல் அவனை மேலும் மேலும் வற்புறுத்தினாள்.

''நான் குடும்பத்தோடு சேர்ந்து வாழ வேண்டும் என்பதில் உனக்கென்ன அவ்வளவு அக்கறை, சுரபி?'' என்று ஒரு நாள் கதிரவன் கேட்கவும் ஒருகணம் சுரபி திகைத்துப் போனாள்.

உடனே சுதாரித்து, ''எங்கள் நல்ல முதலாளி, குடும்ப வாழ்வின் சுகத்தை இழந்து விடக் கூடாதே என்கிற அக்கறை தான். வேறென்ன?'' என்று அவனுக்கு ஓர் 'ஐஸ்' வைத்து மேலும் வலியுறுத்தினாள் அவள்.

''ம்ம்...'' என்று அவன் யோசனையோடு அவளைப் பார்க்கவும், ஏனோ மூச்சடைத்தது சுரபிக்கு. ''நீ இவ்வளவு பிடிவாதமாய் வேண்டும் போது அதைச் செய்யாதிருக்கவும் எனக்கு மனம் வரவில்லை...''

''ஆகா! அப்படியானால் குடும்பத்தோடு சேர்ந்து விடப் போகிறீர்கள்! அப்படித்தானே சார்? அப்படித்தானே?'' என்று குதூகலத்துடன் கைதட்டினாள் அவள்.

''ஒரே ஒரு நிபந்தனையின் பேரில். அங்கே நீயும் என்னோடு வர வேண்டும்''.

அவள் புரியாது விழிக்கையில், விழிகளில் பளபளப்போடு, ''என் மனைவியாக'' என்று கதிரவன் கூறி முடிக்கவும் சுரபி பிரமித்துப் போனாள்.

அவளது திகைப்பை ரசித்தபடி, ''சொல்லு சுரபி. என்னை மணந்து கொள்வாய்தானே?'' என்று குரலில் நகை இலங்க வினவினான் கதிரவன்.

அந்தக் குரலே அவள் மீது பூவாய்ச் சொரிவது போல உணர்ந்தாள் சுரபி.

ஆனால் இது எப்படி நடக்க முடியும்? ''நான்... நான் அனாதை, ஆசிரமத்தில் வளர்ந்த.. ஏதுமற்ற ஏழை'' என்றாள் தழுதழுத்த குரலில். இன்றுவரை அதைத் தாழ்வாக எண்ணாதவள்தான்.

''ஆனால் இந்த உலகில் மற்ற யாரையும் விட என் மேல் அதிக அன்பு வைத்திருப்பவள்'' என்று அவளது கையைப் பற்றிக் குனிந்து மென்மையாக முத்தமிட்டான் அவன்.

அலையலையாய்ப் பளபளத்த சிகையுடன் குனிந்திருந்த அவனது தலையைப் பார்க்கையில் அப்படியே நெஞ்சோடு அணைத்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது சுரபிக்கு. அவளுக்கு இப்படி ஓர் அரும்பேறா?

மெல்ல நிமிர்ந்து, ''என் பழைய காரியதரிசிக்கு உடம்பு சரியில்லாமல் போனதுகூட எவ்வளவு நல்லதாகிப் போயிற்று, பார். எப்படி ஒரு புதையலாய் வந்து எனக்குக் கிடைத்தாய்!'' என்று அவன் வியந்து கூறவும் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவள் எப்படி இங்கு வந்து சேர்ந்தாள்? ஏன் வந்தாள்? இதை எப்படி மறந்தாள்?

மகனைக் குடும்பத்தோடு இணைத்து வை என்றால் உனக்கொரு குடும்பத்துக்கு ஆள் பார்த்தியா என்று பூமிநாதன் கேட்கமாட்டாரா?

அதைவிடப் பயங்கரம்! உண்மை தெரிகிற போது தன்னை ஏமாற்றியவள் என்று கதிரவன் வெறுத்து விட மாட்டானா? அதுவும் மன்னிக்கிற, மறக்கிற குணம் இல்லாத கதிரவன்!

உரிய நேரத்தில் உற்ற நண்பனாய் அவளது மூளை விழிப்புடன் நினைவுறுத்தத்தான் செய்திருக்கிறது. ஆனால் அதற்கு உரிய முக்கியத்துவம் கொடுக்க அவளுக்குத்தான் அப்போது தெரியாமல் போய் விட்டிருக்கிறது! செய்த முட்டாள்தனத்தை எண்ணி எண்ணி வாழ்வு முழுவதும் வருந்த வேண்டும் என்று விதி இருக்கையில் வேறு எது வந்து அதைத் தடுக்க முடியும்?

பெரிய இடத்துப் பணக்கார வாழ்வுக்குப் பேராசைப் பட்டு விட்டோமோ? அதற்காகத்தான் கடவுள் தண்டித்து விட்

டாரோ என்று கதிரவனைப் பிரிந்த பிறகு பலமுறை சுரபி எண்ணிப் பார்த்ததுண்டு. இம்மியளவும் பட்சபாதமின்றி ஆராய்ந்திருக்கிறாள். கார் சவாரி, பட்டாடைகள், நகைகள், ஏசி, பணியாட்கள் என்று எந்தவித வசதிகளையும் கதிரவனை மணக்க அவள் முடிவு செய்த போது அவள் மனதில் நினைத்துக்கூடப் பார்த்ததில்லையே! ஒருதரம்கூட அந்த நினைவு வந்ததே இல்லைதான்.

அவனது கம்பீரமான தோற்றமும், ஆழ்ந்த குரலும், குறும்பு நகையும் தவிர வேறு எதையுமே அவளால் எண்ணவும் முடியவில்லையே! அவளது கைபற்றி அவன் முத்தமிட்ட போது, அதற்காகவே பிறந்து வளர்ந்து அத்தனை காலம் வாழ்ந்தது போல உணர்ந்தாளே; அப்போதும்கூட கிறங்கிப் போய் உடனே கதிரவனிடம் சம்மதம் கூறிவிடவில்லையே அவள்.

''இதுபற்றி.. நான் நானாக முடிவு சொல்வதற்கு இல்லை சார். கலந்து ஆலோசிக்க வேண்டும்...''

''இன்னமும் 'சாரா'?'' என்று அவன் வெண்ணிறப் பல்வரிசை காட்டி நகைத்த போது மேலும் கிறங்கிப் போனாலும் அப்போதும் சரியென்று விடவில்லை அவள்.

ஆனால் அதற்குள்ளாக, ''யாரோடு கலந்து ஆலோசிப்பாய்? உனக்குத்தான் யாரும் இல்லை என்றாயே?'' என்று கேட்டு அவளை மீண்டும் தூக்கிவாரிப் போட வைத்தான் கதிரவன்.

''அது... உறவு இல்லை என்றாலும் நட்பு இராதா? எனக்குள்ளேயே நான் நாலுவிதமாய் யோசிக்க மாட்டேனா?'' என்று சமாளிக்கும் போதே உள்ளூரக் குளிர் பிறந்தது. இப்படி ஒருவார்த்தையில் பிடிக்கிறவனை எப்படி சமாளிக்க முடியும்?

ஆனால், அந்தஸ்து பேதம் காட்டி யார் எதிர்க்கக்கூடும் என்று சுரபி நினைத்தாளோ, அந்தப் பெரியவர், ''உன்னால் முடியும்'' என்று அடித்துச் சொன்னார். அவளும் நம்பி விட்டதுதான் பரிதாபமாகிப் போயிற்று.

5

யோசிக்க அவகாசம் வேண்டும் என்று சுரபி கேட்டதில் கதிரவனுக்குச் சற்று ஏமாற்றம்தான்.

''உனக்கும் என்னைப் போலவே எண்ணம் என்று நினைத்தேனே? இருவர் மனமும் ஒன்றுபட்டபின் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்று வாதித்தவன் அவள் பிடிவாதமாயிருக்கவும், ''சரி, யோசி. ஆனால் நான் பொறுமைசாலி அல்ல. சுரபி எப்படியும் எனக்கு நாளை மாலைக்குள் பதில் - நல்ல பதில் சொல்ல வேண்டும்'' என்று அரைமனதாய் அனுமதி கொடுத்தான்.

அலுவலகம் முடிந்ததும் கிளம்பிச் சென்று, பூமிநாதனைத் தேடிப் பிடித்தாள் சுரபி.

'அடையார் பார்க்'கில் ஒரு 'பிசினஸ் மீட்டிங்'கை அரைகுறையாக முடித்துக் கொண்டு சற்று எரிச்சலுடனேயே வந்த பூமிநாதன், விஷயம் அறிந்ததும் முகமலர்ந்தார். ''சம்மதித்துவிடு'' என்றார் எளிதாக.

அவள் ஆச்சரியமாய் நோக்கவும், ''நான் உன்னைக் கவனித்து வந்திருக்கிறேன். சுரபி. என் மகனுக்கு உன் போல ஒரு மனைவி அமைந்தால் நன்றாக இருக்கும் என்றுகூட எண்ணியதுண்டு'' என்று அவளை மேலும் வியப்படையவைத்தார் அவர்.

''சார்..!''

அவளது முகத்திலேயே அகத்தைப் படித்து, ''பாரம்மா, என் மகன் இளைஞன். அவனிடம் வேறு காரியமாக என்றாலும், அதற்காக ஓர் இளம்பெண்ணை அனுப்பி வைக்கும்

போது இந்த மாதிரி விளைவையும் எதிர்பார்த்துத்தானே இருக்க வேண்டும்? உன்னைப் பற்றி எனக்குப் பூரண திருப்தி என்றான பிறகுதான் உன்னிடம் நான் உதவி கேட்டதே. இப்போது இருவர் மனமும் ஒன்றானபிறகு யோசிப்பானேன்?'' என்று கேட்டு அவளை அயரவைத்தார் அவர்.

மனதை அப்படியேவா முகத்தில் எழுதி வைத்துக் கொண்டு திரிகிறேன் என்று உள்ளூரக் கூசிப் போனாள் சுரபி. ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''என்னைப் பற்றி ஒன்றும் இல்லை சார். ஆனால் திருமணம் என்றால் எல்லாவிதத்திலும் பொருந்த வேண்டும் இல்லையா? வீசிஆரை (VCR) எப்படிக் கையாள வேண்டும் என்றுகூட எனக்குத் தெரியாது... ஏசி, கார், கீசர்... எத்தனை இடங்களில் என்னால் உங்கள் மகன் அவமானப்படும்படி ஆகக்கூடும்? அதைவிட, உங்கள் லெவலில் ஒரு பெண்ணைப் பார்த்து மருமகளாக்குவது நல்லதில்லையா?'' என்று மனதைக் கல்லாக்கிக் கொண்டு உரைத்தாள் அவள். நடப்பும் அதுதானே?

''எங்கள் லெவலிலா? இவன் குணத்திற்கா? எத்தனை நாள் தாங்கும் என்கிறாய்?'' என்று கேட்டார் அவர். வசதி இருப்பதால் பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றியே பழக்கி விடுவதால் அவரவர் விருப்பம்தான் சட்டம் என்றே தோன்றிவிடுகிறது. விட்டுக் கொடுப்பது, சகித்துப் போவது என்பதெல்லாம் இருப்பதே தெரிவதில்லை. இருவர் விருப்பமும் ஒன்றாக இருக்கும்வரை கவலையில்லை. கொஞ்சம் முரண்பட்டாலும் உனக்கு நான் எதிலும் குறைவில்லை என்று வெட்டிக் கொண்டு போய்விடுகிறது...''

அவரை நிமிர்ந்து நோக்கினாள் சுரபி. ''ஒன்று சொல்லிவிடுகிறேன் சார். பண விஷயம் வேறு சார். மற்றபடி நானும் மிஸ்டர் கதிரவனுக்கு எந்தவிதத்திலும் குறைந்தவளாக என்னை நினைக்கவில்லை, சார்'' என்றாள் உறுதியான குரலில்.

பெரியவர் முறுவலித்தார். ''குறைவானவளாக நினைத்திருந்தால், நானும் என் மருமகளாக உன்னை ஒத்திருக்க மாட்டேன். தன்னம்பிக்கைக்கும் தற்பெருமைக்கும் நிறைய இடைவெளி உண்டம்மா. நான் சொல்வது விட்டுக் கொடுப்பது பற்றி. மனதில் இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு, உன்னால் அவன் அவமானப்பட்டு விடக் கூடாது என்று அவனுக்காகத்தானே யோசிக்கிறாய்? இப்படி ஒரு மனைவி அவனுக்கு வேறு எங்கேம்மா கிடைப்பாள்? அப்படியே கிடைத்தாலும் கதிர் ஒப்புவானா? அவன் குணம் உனக்கும் தெரியுமே''.

''அதுதான் சார் எனக்கும் பெரிய பயம். உண்மை தெரிகிற போது...''

''தெரிவானேன்?'' என்று அவர் கூறவும் அவள் திடுக்கிட்டுப் போனாள்.

''சொல்லிவிட வேண்டாமா, சார்?'' என்று அவள் தொடங்குமுன் அவர் அவசரமாக, ''அவ்வளவுதான்.. அவன் மீண்டும் கொம்பேறி மூக்கனாகி விடுவான். இவ்வளவுநாள் நீ செய்த வேலை பயன் இல்லாது போகும். அதனால் இப்போதைக்கு அவனிடம் சொல்லவே கூடாது'' என்றார்.

''பிறகு உண்மை தெரிகிற போது என்ன ஆகும்?'' என்று அஞ்சினாள் அவள்.

''தெரிய வாய்ப்பில்லை மகளே'' என்றார் பூமிநாதன். ''கதிரவனுக்கு ஆடம்பரக் கல்யாணம் என்றால் வெறுப்பு. எனவே நெருங்கிய உறவு தவிர வேறு யாரும், முக்கியமாக நம் 'ரியல் எஸ்டேட்' ஆட்கள் யாரும் திருமணத்துக்கு வரப் போவது இல்லை. தொழிலிலும் அவனுக்கு அவன் பார்க்கும் இயந்திர உற்பத்தியில்தான் ஆர்வமே தவிர கட்டடக் கலை பிடிப்பது இல்லை. அந்தப் பக்கமே வரமாட்டான். என்னையே அந்தப் பிரிவை விட்டுவிடும்படிதான் சொல்வான். எனவே பழைய விவரம் அவனுக்குத் தெரிய வாய்ப்பே கிடையாது. எப்படியோ லட்சத்தில் ஒரு வாய்ப்பாகத் தெரிந்தது

என்றாலும் நான்தான் 'அவன் தவறாக எண்ணக்கூடும்; சொல்லாதே' என்றதாகக் கூறிவிடு. மிஞ்சி மிஞ்சி அவன் அதுபற்றி என்னிடம் விசாரிக்கக் கூடும். நானும் அப்படியே சொல்லி விட்டால் விஷயம் அத்தோடு முடிந்து விடும். அதற்குள் உன் அண்மை வேறு பழகி விடுமா, இதைப் பெரிதாக நினைக்கக் கூடத் தோன்றாது'' அதற்கு மேல் அவர் 'சுரபி' வசனம் பேசவும் பேசாமல் தலையாட்டி விட்டாள் அவள்.

சுரபிக்கு அடியோடு கவலை அகன்றது என்று சொல்ல முடியாது. ஆனால் லேசாக இருந்த உறுத்தலைக் கதிரவன் மீது கொண்ட காதல் மழுங்கடித்து விட்டது எனலாம். அத்தோடு அவன் நலத்துக்காகச் செய்தது என்று எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்வான் என்றோர் அற்ப நம்பிக்கை.

திருமணமானதும் கதிரவன் வீடு வந்துவிடப் போகிறான் என்பதே, சுரபி மீது செல்வநாயகியும், பூமாவும் அன்பு கொள்ளக் காரணம் ஆயிற்று.

கரவற்று, சுரபி அறிய வேண்டிய அனைத்தையும் இருவருமாகக் கற்றுக் கொடுத்தனர்.

கதிரவனோ சுரபியை அன்பிலே குளிப்பாட்டினான் எனலாம்.

பூமிநாதன் சொன்னது போலவே, எளிமையாகத் திருமணம் நடந்தேறியது. மருமகளின் 'பாக்கெட் மணி'க்காக அடையாறில் ஒரு பங்களாவை அவள் பேரில் எழுதி வைத்து வாடகை அவள் கைக்குப் போகுமாறு ஏற்பாடு செய்தார் மாமனார்.

கணவனும், மனைவியுமாக தேனிலவுக்கென்று அந்தமானுக்குச் சென்று பத்து நாட்களை ஆனந்தமாகக் கழித்துவிட்டு வீடு வந்து சேர்ந்தனர்.

மூன்று மாதங்கள் சுரபி சொர்க்கத்தில் இருந்தாள். அதன் பின்...

அன்று அவர்கள் இருவருக்கும் திருமணம் நடந்து மூன்றாவது மாதம் முடிந்த நாள். கொண்டாடுவதற்காக இரவு டின்னருக்கென்று 'தாஜ்' ஓட்டலுக்கு அழைத்துச் சென்றிருந்தான்.

செல்வநாயகியின் 'லேடீஸ் கிளப்' சினேகிதி ஒரு பெண்மணி, சுரபியைக் கண்டதும், இரண்டு மேசை தள்ளி அமர்ந்திருந்த கணவருக்கு, சுரபியை அறிமுகம் செய்விக்க அழைத்துச் சென்றாள்.

புன்னகையோடு தோளைக் குலுக்கி விட்டு, சுற்றிலும் நடப்பதை அசுவாரசியமாகக் கேட்டபடி அமர்ந்திருந்தான் கதிரவன்.

பக்கத்து மேசைப் பேச்சு உரத்த குரலில் அவனது செவிப் பறையை மோதிற்று. ''அடடே, ஜெயசீலன்! என்னப்பா இந்தப் பக்கமெல்லாம்! ஆனால் உனக்கென்னப்பா? பெண்டாட்டி கைநிறையச் சம்பாதிக்கிறாள். பெரிய கம்பெனி. எம்.டி.க்கு செகரட்டரின்னா சும்மாவா? உம்.. வெட்டு, வெட்டு'' என்று உள்புகைச்சலை மறைத்து வேடிக்கை போலப் பேசினான் ஒருவன்.

''ஆங்! நல்லாத் தந்தாளே, அவள் சம்பளப் பணத்தை! சம்பாதித்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது ஆண்பிள்ளையின் கடமை. நீ கொண்டு வந்தால் சாப்பிடுவோம், அல்லது பட்டினிக்கு நான் தயார்னு அவள் சம்பளப் பணம் மொத்தத்தையும் அப்படியே ஆர்.டி.யில் போட்டு விடுவாளே, கிராதகி. இது கும்மா வந்த எக்ஸ்டிரா பணம்ப்பா. மெர்சியோட எம்.டி.யுடைய அப்பனே, அவளை மெடிக்கல் லீவு போடச் சொல்லி, சம்பளத்தோட தனியா வேறே பணமும் தந்தான். அங்கே என்னமோ கசமுசாப்பா. யாரோ வேறே மதத்துப் பெண்ணைக் கட்டணும்னான் போல. அப்பன்காரன் தனக்கு வேண்டிய பெண்ணை மகனுக்கு செகரட்டரியாக் கொண்டாந்து மயக்கி ஆளைக் கவுத்திட்டான். லீவு போட்டதுக்காக மெர்சிக்கு அந்தாள் கொடுத்த பணம் இது. ரொம்பக் கெஞ்சிக் கேட்டேன்னு அதிலே பாதி தந்தாப்பா'' என்றான் அந்த ஜெயசீலன் என்று அழைக்கப்பட்டவன்.

அன்றிரவு தனிமை வளர, சுரபி எதையும் ஊகிக்கக் கூட இல்லை.

மின்னாமல் விழுந்த இடியாக, ''என்னை மயக்கி மணப்பதற்காக என் அப்பா உனக்குத் தந்த கைக்கூலி எவ்வளவு, சுரபி?'' என்று நிதானமாகக் கதிரவன் கேட்ட போது, மலங்க விழிப்பது தவிர அவளால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

அதற்குள் அவனாகவே பதிலையும் கண்டுபிடித்து, ''ஓ, மறந்து போனேன் பார், அந்த அடையாறு பங்களா! இவ்வளவு யோசிக்கத் தெரியாத முட்டாள் என்பதால்தான் என்னை ஏய்ப்பது உங்கள் இருவருக்கும் அவ்வளவு எளிதாக இருந்திருக்கிறது!'' என்று நக்கல் பேசவும் அவள் கலங்கிப் போனாள்.

சுரபி எவ்வளவோ மன்றாடியும் கதிரவன் ஒத்துக் கொள்வதாக இல்லை.

உங்கள் தந்தை உதவி என்று கேட்டார் என்று அவள் சொன்னால் அவருக்கு உதவி செய்ய நீ யார் என்று அவன் கேட்டான். அவருக்கென்ன, மகனில்லையா? மனைவியில்லையா? மகளில்லையா? ஏவிய பணி செய்ய எத்தனையோ வேலைக்காரர்கள் இல்லையா?

அவளை அன்னியமாய் நிறுத்தி அவன் பேசிய விதம் சுரபியைப் பதறச் செய்தது.

எல்லாரும் இருந்தும் இல்லையென்றுதானே என்னிடம் உதவி கேட்டார் என்று முகத்தில் அடித்தாற்போலக் கூறமுடியாமல் வேறு வழியில் முயன்றாள் அவள்.

''உங்களுக்காகவும்தான், கதிர். உங்கள் குடும்பத்தோடு நீங்கள் இணைய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான்...''

தோளைக் குலுக்கினான் அவன்.

''நான் சொல்லத்தான் நினைத்தேன். ஆனால் உங்கள் தந்தை...'' என்று பூமிநாதன் சொன்னதைச் சொல்லிப் பார்த்தாள்.

''அவர் சொல்ல வேண்டாம் என்றால் நீ அதையே பின் பற்றியாக வேண்டுமா? முதலில் நீ அப்பாவுக்காக வந்தாய், அவரிடம் உண்மையாக இருந்தாய். சரிதான். ஆனால் நம் இருவருக்கும் காதல் என்று ஆனபின் நீ யாருக்கு உண்மையுள் ளவளாக இருந்திருக்க வேண்டும்? சொல்லு, நான் உன்னிடம் எதையாவது மறைத்ததுண்டா? நீயானால் பொய்யிலே தொடங்கியவள் பொய்யிலேயே வாழ்ந்து விட்டாயே! இன்று வரையும்! சே!''

''கணவனிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட முடி யாது, கதிர். கணவனின் நன்மைக்காகக் கூடச் சிலவற்றை மறைக்க நேரிடலாம். ஒருவருக்கு மட்டுமே உணவு இருந்தால் கணவனிடம் அன்பு கொண்ட ஓர் ஏழைப்பெண் தான் உண்டு விட்டதாகக் கூறி அதைக் கணவனுக்குக் கொடுக்கத்தான் முயற்சிப்பாள். கணவனிடம் பொய் சொன்னாள் என்று அவ ளது அன்பில் குறை காண முடியாது, கதிர்'' என்று எடுத்துக் காட்டுடன் வாதாடினாள் சுரபி.

ஆனால் அதுவும் குற்றமாகிப் போயிற்று. ''பேச்சுப் போட்டிகளிலும் பட்டிமன்றங்ளிலும் வெற்றி பெற்றவள் அல் லவா? நினைவிருக்கிறது, மனுநீதிச் சோழனும் தசரதனும் கூட நன்றாகவே ஞாபகத்தில் இருக்கிறார்கள்'' என்றான் அவன் இடக்காக.

''உங்களை இழக்க நேருமோ என்று அஞ்சிவிட்டேன் - அதனாலேயே சொல்லப் பயந்தேன்'' என்று பணிந்தும் பார்த் தாள் அவள்.

''இப்போதென்ன, கைக்குள் பிடித்து வைத்திருப்பதாக எண்ணமா?'' என்றான் அவன் எகத்தாளமாக.

மேலும் படுத்திருக்க முடியாமல் எழுந்து அமர்ந்தாள் சுரபி. இதையெல்லாம் ஒதுக்கிவிடும் சக்தி பெற்றுவிட்டதாக எண்ணியது எவ்வளவு பெரிய பொய்! அன்றையத் துன்பம் அணு அளவும் குறையாமல் அப்படியே நினைவு வருகிறதே!

எந்த வகையிலும் அவன் இளகுவதாக இல்லை என்று அறியவும் சுரபியும் சவித்துப் போனாள். ''நீங்கள் பொன்மா னைத் தேடுகிறீர்கள், கதிர். குற்றம் குறைகள் அற்ற மனிதர் யார்? உங்களிடம் குறையில்லையா? என்னிடமும் பிழைகள் உண்டுதான். ஒருவரின் குற்றம் குறைகளோடு சேர்த்து அன்பு செலுத்துவதுதான் உண்மையான காதல். ஆனால்.. இருக்கமு டியாத தங்கமானைத் தேடிச் சென்ற ராமனும் சீதையும் அடைந் தது வேதனைதான். இதை எல்லாம் எடுத்துச் சொன்னால் பட்டிமன்றம், பேச்சுப் போட்டி என்பீர்கள். போகட்டும், இனி என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''பிரிந்துவிட வேண்டியதுதான்'' என்றான் அவன் தயங் காமல்.

பிரிவு?

அதிர்ந்து போனாள் சுரபி.

உயிரோடு உயிராகக் கலந்தபிறகு என்ன அனாயாசமாக வெட்டுகிறான்! அவன் குணம் அறிந்தும் அவன் மீது உயிரை வைத்தது எவ்வளவு பெரிய பிழை?

ஆனால் அவனைப் பிரிந்து அவளால் எப்படி வாழ முடியும்? வேண்டாம், வேண்டாம் என்று அவன் காலைப் பிடித்துக் கதறி அவன் மனதை மாற்றிவிட வேண்டும் என்று தோன்றியது.

ஆனால் பிரிவின் துயரம் அவளுக்கு மட்டும்தானா? அதே அளவு துன்பம் அவனுக்கும் இல்லை என்றால் அவன் காலைப் பிடித்துக் கெஞ்சுவதே கேவலமில்லையா?

கதிரவன் மேலே பேசினான். ''இனியும் உன்னை என்னு டையவள் என்று எண்ணி வாழ என்னால் முடியாது. அதனால்

நாம் பிரிவது தவிர வேறு வழி இல்லை. ஆனால் பழைய மாதிரி கஷ்டப்பட நேருமோ என்று நீ அஞ்சத் தேவையில்லை. ஒரு பெரும் தொகை உன் பெயரில் பாங்கில் 'டெப்பாசிட்' செய்து விடுகிறேன். உன் 'கைக்கூலி' அடையாறு வீட்டு வாடகையுமாக மிகவும் வளமாகவே நீ வாழலாம்.''

இங்கே உயிரே போய்க் கொண்டிருக்கிறது, வளமாம். பணமாம். இவன் பணம் யாருக்கு வேண்டும்?

சுரபி பதிலேதும் சொல்லவில்லை.

மறுநாள் அவன் வெளியே சென்ற பிறகு, ஒரு வெற்றுத் தாளில் அடியில் கையெழுத்திட்டு வைத்தாள். இன்னொரு தாளில், திருமணத்தை முறிப்பதானால் அதற்குரிய வாசகங்களை, அவளது கையெழுத்தின் மேல் எப்படி வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளும்படி தெரிவித்தாள். அத்தோடு, அடையாறு வீட்டின் உரிமையைத் திரும்பவும் திரு.பூமிநாதனுக்கே முழுமனதோடு கொடுப்பதாக எழுதினாள். முதலும் கடைசியுமாக அவளுக்குச் செய்யும் ஒரே உதவியாக, இந்த வீட்டிலிருந்து யாரும்- யாருமே இனி அவளை அணுகாமல் இருந்தால் பெரும் நன்றி உடையவளாகஇருப்பேன் என்று எழுதிக் கையெழுத்திட்டாள். பின்குறிப்பாக, அவளைத் தேடிவருவது அவளைச் சித்திரவதை செய்வதாகும் என்று குறிப்பிட்டாள்.

இரு காகிதங்களையும் மடித்து, கதிரவன் வந்ததும் கண்ணில் படுகிற இடத்தில் வைத்தாள்.

ஒரு கைப்பெட்டியில் உடுமாற்றுக்கென மூன்று சாதாரணச் சேலைகள், சட்டை, உள்ளாடைகளுடன் மிகவும் அவசியமென்று பட்ட பொருட்களோடு சேர்த்து எடுத்து வைத்துக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பி விட்டாள்.

பெரிய வீடுகளில் இது ஒரு வசதி. ஆளுக்கோர் இடத்தில் அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டு இருந்ததால் செல்வநாயகியையோ, பூமாவையோ சந்திக்காமலேயே சுரபியால் வீட்டை விட்டு வெளியேற முடிந்தது. வியந்து நோக்கினாலும்

வீட்டை விட்டு வெளியேறுகையில் உடம்பின் ஒரு பாகத்தையே வெட்டிவிட்டுப் போவது போலப் பெரும் வேதனையாகத்தான் சுரபி உணர்ந்தாள். சொல்லப் போனால் இவ்வளவு வேதனையாக இருக்கக்கூடும் என்று அவளே எதிர் பார்க்கவில்லை. ஆனாலும் வேண்டாம் என்றவனை சட்டத்தின் மூலம் பிடித்து வைத்துக் கொள்ள அவளது தன்மானம் இடம் தரவில்லை.

பிடிவாதமாக, வெளியேறி விட்டாள்.

நேரே, முன்னர் வேலைபார்த்த போது பெண்கள் விடுதியில் உடன் தங்கியிருந்த தோழி நந்தினியிடம் சென்றாள். அவளும் திருமணமாகிக் கணவனோடு வாழ்கிறவள். சுரபியிடம் தனி அன்பு உள்ளவளும் கூட.

சுரபி தெரிவித்த அளவிலேயே அவளுக்கு அதிர்ச்சிதான். ஆனால் சுரபியை அறிந்தவள் என்பதால் அவசியமற்ற ஆலோசனைகளை வழங்க முற்படவில்லை.

தோழியை நேரே அவளுடைய தந்தையிடம் வழிநடத்தினாள் நந்தினி.

வேலை செய்த போது சேமித்திருந்த தன் பணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, சென்னை மாநகரத்தை விட்டு வெளியேறினாள் சுரபி.

பேச்சுப் போட்டிகளிலும், பட்டிமன்றங்களிலும் பேசும் போது, பழம்பெரும் இலக்கியங்களிலிருந்து பொருத்தமான மேற்கோள் காட்டிப் பேசுவது சுரபியின் தனிச் சிறப்பு.

சுரபி வென்று வந்தபிறகு, 'அய்யோடி அந்தக் குறளை நான் மறந்துவிட்டேனே' என்று மற்றவர்கள் பேசும் போது அவளுக்குச் சிரிப்பு வரும்.

அன்று வரமாகத் தோன்றிய ஞாபகசக்தி இப்போது சாபமாக மாறியது.

கதிரவன் கெஞ்சியதும், குலவியதும், காலை சென்றால் மாலை திரும்பி வரும்வரை அவளைப் பிரிந்திருக்க முடிய

வில்லையே என்று தவித்ததும்... எல்லாமே பொய்யாகி விடக் கூடுமா? இல்லையென்றால் 'பிரிந்துபோ' என்று அவனால் எப்படிச் சொல்ல முடியும்?

எத்தனையோ நாட்கள் இரவும் பகலுமாகத் தவியாய்த் தவித்து, புழுவாய்த் துடித்து, கட்டுப்படுத்த முடியாமல் கண்ணீர் வடித்து.. மெல்ல மெல்ல அதெல்லாம் அடங்கி, ஓரளவு சமாதானப்பட்டு வந்த வேளையில் அதை அடியோடு குலைக்கவென்று வந்து சேர்ந்திருக்கிறானே!

சிறிதும் கண்மூட முடியாமல் இரவெல்லாம் மொட்டு மொட்டென்று விழித்திருந்தே கழித்துவிட்டு காலையில் எழுந்தபோது தலைதெறித்தது. சகித்துக் கொண்டு வேலைகளை முடித்தாள்.

விரைவாகவே கதிரவனும் வந்துவிட, இருவருமாகவே ஆதிமூலத்திடம் சென்று, விவரம் கூறி, விடுப்பு பெற்றுக் கிளம்பினர். கதிரவனின் பேச்சினால், அவனுடைய தந்தை குணமாகும் வரை இருந்துவிட்டு வருமாறு சுரபிக்கு அனுமதி கொடுத்தார் ஆதிமூலம்.

இரக்கமற்ற பகல் வெளிச்சம். கதிரவன் முகத்தில் மூப்பைக் காட்டியது. உதட்டோரத்தில் சுருக்கமும், புருவ மத்தியில் சுளிப்பின் மேடும், சென்னி ஓரத்தில் சிறு நரையும்! ஆக அவனும் ஒன்றும் ஆனந்தத்தில் மிதக்கவில்லை என்று தோன்றிய அற்ப திருப்தி உடனேயே மடிந்தது.

அவனும் சேர்ந்து வருந்துவதில் என்ன லாபம்? அவள் ஒருத்தி நோவது போதாதா?

சென்னியோரத்து நரையைக் காண்கையில் அவளுக்கு வேறு தோன்றியது. அவளுக்கும் இப்படி நரைத்திருக்கிறதா?

யோசித்தும் நினைவு வரவில்லை. தினமும் பொட்டு வைப்பதற்காக மட்டும் அரைகுறையாகக் கண்ணாடி பார்த்தாளே தவிர, அழகு, அழகின்மை, நரை, திரை எதுவும் கவனிக்கத் தோன்றியது இல்லை.

மாலை ஐந்தடித்ததும், கனவன் வரவுக்காக கண்ணாடியில் மீண்டும் மீண்டும் பார்த்து அழகுபடுத்திக் கொண்ட நினைவில் அவளுக்குத் தொண்டை அடைத்தது.

இவன் முன் கண்ணீரைக் காட்டிவிடக் கூடாது என்று தலையை வெளிப்புறமாய்த் திருப்பிக் கொண்டு இருக்கையில் சாய்ந்தாள் அவள். வலியெடுத்த நெற்றிப் பொட்டைத் தன்னிச்சையாய் விரல்கள் நீவி விட்டன.

''தலைவலியா? கண்ணெல்லாம் சிவந்திருக்கிறதே. இரவு சரியாகத் தூங்கவில்லையா?''

அவள் பேசாதிருந்தாள்.

''நானும் சரியாகத் தூங்கவில்லை. என்னதான் தகுதியற்றவை என்றாலும் பழைய நினைவுகளை அடியோடு விலக்குவது கடினமாய்த்தான் இருக்கிறது''

''தகுதியற்றவை!'' அவளும் தகுதியற்றவள்தான்!

''நான் சற்று தூங்கப் போகிறேன்'' என்று கூறி விழிகளை இறுக மூடிக் கொண்டாள் சுரபி.

காரை ஒதுக்கி நிறுத்தி, பின்சீட்டிலிருந்து ஒரு 'குஷனை' எடுத்து அவளிடம் கொடுத்தான் கதிரவன். ''இதைத் தலைக்கு வைத்துக் கொண்டு தூங்கு''.

இந்தக் கனிவு அவளுக்குப் புதிதல்லவே. மீண்டும் கண்ணைக் கரித்தது அவளுக்கு.

இல்லை. இந்தக் கண்ணீரைக் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும். அங்கே போனபிறகும் இப்படிக் கண்ணீர் தளும்பிக் கொண்டே இருக்குமானால் எல்லாரும் அய்யோ, பாவம் என்று இரக்கப்பட... சீச்சீ.. அவமானம்.

அந்தப் பெரிய வீட்டு வாழ்வை இழந்ததாலோ, கதிரவனைப் பிரிந்ததாலோ அவள் ஒன்றும் செத்துவிடவில்லை. நன்றாகத்தான் வாழ்கிறாள். அப்படித்தான் காட்டிக் கொள்ள வேண்டும். கதிரவனுக்கும் கூட.

தானாக அவளது உடல் நிமிர்ந்து அமர்ந்தது.

6

என்னதான் தைரியமாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்று எண்ணியபோதும், 'அண்ணீ' என்று ஓடிவந்து அணைத்துக் கொண்டு பூமா விசும்பிய போது அவளுக்கும் கண்கலங்கத்தான் செய்தது.

''மாமா... அத்தை எங்கே, பூமா?'' என்று அவளைத் தட்டிக் கொடுத்தபடி கேள்வி கேட்கத் தொடங்கினாள். பேசும் போது அழுகை நின்றுதானே ஆகவேண்டும்? குறைந்தபட்சம் குறைந்துவிடுமல்லவா?

''அப்பா அறையில்தான், மருத்துவமனையில் இருக்க முடியாது என்று அப்பா சொல்லிவிட்டதால்.. அண்ணி, அப்பா அறையே மருத்துவமனை மாதிரி இருக்கிறது. உள்ளே போகவே கஷ்டமாக இருக்கிறது.. நீங்கள் வந்ததும் அம்மா உங்களை அழைத்துவரச் சொன்னார்கள்...'' என்றவள் சுரபியை ஒருதரம் பார்த்து, ''எதற்கும் குளித்து உடை மாற்றிவிடுகிறீர்களா, அண்ணி? பயணத்தில் களைத்தாற்போலத் தெரிகிறீர்களா, அப்பா வருத்தப்படக்கூடும்''

அண்ணன் முன்னிலையில் பூமா குறிப்பாய் உணர்த்துவது புரியவும், ''இதோ பத்து நிமிடங்களில் வருகிறேன்'' என்றவள் திகைத்தாள்.

சில மாதங்கள் சொந்த வீடாய்ப் பழகியதுதான். ஆனால் இப்போது எந்த அறையில்.. அவளுக்கு எந்த அறை அளிக்கப்பட்டிருக்கிறது?

சுரபியின் தயக்கத்தைக் கவனியாமல், ''நான் அம்மாவிடம் நீங்கள் வந்துவிட்டதைச் சொல்லப் போகிறேன்'' என்று ஓடிவிட்டிருந்தாள் பூமா.

வீட்டுக் காரியஸ்தரிடம் எதையோ கேட்டு முடித்த கதிரவன் அவள் நிற்பதைக் கண்டதும் அருகில் வந்தான். ''என்ன?''

''குளித்து, உடை மாற்றி முகம் சீர்செய்து கொண்டுதான் மாமாவைப் பார்க்கப் போக வேண்டும். என் பெட்டி எங்கே வைத்திருக்கிறது?'' என்று சாதாரணமாக்கப்பட்ட குரலில் வினவினாள் சுரபி.

''அது... வேலையன் மாடிக்குத்தான் கொண்டு போனான். வா'' என்று அவனும் உடன் நடந்தான்.

முதுகில் குத்துகிற உணர்வு. யாரோ- அனேகமாக வேலையனாக இருக்கக் கூடும். வெறித்துப் பார்ப்பதை சுரபி உணர்ந்தாள். ஆனால் பார்க்கத்தான் தோன்றும். இந்தப் பார்வைகளைக் கண்டு கொள்ளாமல் ஒதுக்கித்தான் ஆக வேண்டும்.

எங்கே வைப்பது என்று புரியாமல் சுரபியின் பெட்டியைக் கதிரவனின் முன்பு இருவருக்கும் பொதுவாய் இருந்த-அறைவாயிலில் வைத்துச் சென்றிருந்தான் வேலையன்.

பெட்டியை எடுத்துக் கொண்டு அடுத்து இருந்த விருந்தினர் அறையை நோக்கித் திரும்பிய மனைவியைத் தடுத்தான் கதிரவன். ''பொறு. அந்த அறையில் 'கீசர்' வேலை செய்யவில்லை. இங்கேயே குளிக்கலாம்''

''எனக்குக் குளிர் நீரில் குளிப்பது பழக்கம்தான்'' என்று அவனைச் சுற்றிக் கொண்டு செல்ல முயன்றாள் அவள்.

''நீ என்னென்ன கஷ்டங்களுக்குப் பழகி இருந்தாலும் இந்த வீட்டில் அவற்றை அனுபவித்துத்தான் ஆகவேண்டும் என்பதில்லை. ஏன்? இந்த அறையைப் பயன்படுத்துவதில் என்ன சிரமம், உனக்கு? மேனகையாக மயக்க வந்ததாக எண்ணி விடுவேனோ என்ற பயமா? அல்லது காய்ந்த மாடாக நானே பாய்ந்து விடுவேன் என்று நினைத்தாயா? கவலைப்படாதே. நீ மேனகையாகவே வந்து நின்றாலும் நான் நிலை தவறிட மாட்டேன்''.

இந்த மாதிரி விதண்டா. வாதங்களுக்கு என்ன பதில் சொல்வது? இந்த வார்த்தைகள் அவளது மனதை உறுத்துவது அவனுக்குப் புரியாமலா இருக்கும்?

நின்று, பதில் பேசி, மேலும் குத்துப்பட மனமின்றி அவ னது அறைக்குள்ளேயே சென்றாள் சுரபி.

அவள் குளித்து வெளிவரும்போது அவன் அங்கே இல்லை. ஆனால் 'டிரஸ்சிங்' மேசை மேல் ஒரு கண்ணாடித் தம்ளரில் பழச்சாறு மூடி வைக்கப்பட்டிருந்தது.

அவசரமாகப் பொட்டு வைத்துக் கொண்டு அவள் கிளம் பிய போது கதிரவன் மீண்டும் உள்ளே வந்தான். பழச்சாற் றைக் காட்டி ''குடிக்கவில்லை?'' என்று வினவினான்.

''இல்லை முதலில் மாமா.. உங்கள் அப்பாவைப் பார்த்து விட்டு, பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று கிளம்பினாள்.

வற்புறுத்தாமல் கூட நடந்தபடி அவன் சொன்னான். ''அப்பாவுக்கு மனவியாதிதான் அதிகம், சுரபி. ஒருவேளை, அவருக்கு.. அதாவது அவரது உடல்நிலைக்கு நல்லதென்று தோன்றி நான் உண்மையற்ற சிலதைக் கூற நேரிடலாம்...''

''என்னவென்று?''

''நம் பிரிவுதான் அவரது நோயின் முக்கிய காரணம். அதனால் இருவரும் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருப்பது போல.. ஒரு.. பாவனை...''

''பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனில்...'' என்று குறள் கூறினாள் சுரபி. அவனது கீழ்க்கண் பார்வையை உணர்ந்து, ''பேச்சுப் போட்டி, பட்டி மன்றத்து வாசனை. சாரி'' என்றாள் வறண்ட குரலில். உடனே தொடர்ந்து, ''அந்த மாதிரிப் பொய் சொல்லிக் கிடைக்கிற ஆரோக்கியம், சில நாட்களில் உண்மை தெரிந்ததும் மீண்டும் கெட்டுவிடாதா?'' என்று வினவினாள்.

இங்கே வர நேராமல், வந்து இவனோடு பேசிக் கொண்டி ருக்க நேராமல் இருந்திருக்கலாம். கதிரவனைப் பாராமல்

இருக்க நேர்ந்தது ஒருவகைத் துன்பமென்றால், பார்த்தும் அன் னியமாய் நிற்க வேண்டியிருந்தது அதைவிடப் பெரும் வேத னையாய்த் தோன்றியது அவளுக்கு.

பிடிவாதமாய் மீண்டும் கவனத்தை அவன் பேச்சில் வைத்தாள்.

''ஆரோக்கியம் திரும்பி, இதயம் மீண்டும் திடப்பட்டு விட்டால், அதன்பின் எந்த உண்மையையும் அவரால் தாங்க முடியும்... நோயினால் பலவீனமுற்றிருப்பவரிடம் சிறுபொய் - ஒரு குறுகிய கால ஏமாற்றுவேலை செய்வது அவசியமே. ஆனால் உயிருக்குயிராய் பழகிய ஆரோக்கியமானவர்களி டம் அது அவசியம் இல்லை; பெரும் பிசகும் கூட. உயிருக்கு யிர் என்ற வார்த்தையே அங்கே பொய்யாகிறது'' என்றான் அழுத்தமான குரலில் கதிரவன்.

உடம்புக்கு மட்டும்தான் நோய் வருமா? நோய் பிடித்த மனதுக்குச் சிகிச்சை வேண்டாமா? சொன்னால் இவன் ஒத்துக் கொள்ள மாட்டான்.

பூமிநாதனின் அறைக்குள் சென்ற போது அவர் மருந்தின் வேகத்தில் துயிலில் ஆழ்ந்திருந்தார். சுரபியைக் கண்டதும் அவசரமாக அருகில் வந்து கையைப் பற்றி, ''வாம்மா...'' என்று மெல்லிய குரலில் வரவேற்றாள் செல்வநாயகி.

செல்வநாயகியின் விழிகளில் நீரைக் காணவும் சுரபிக்கு மனம் உருகியது. முகம் வெளுத்து சோர்ந்திருந்த தோற்றமும் பரிதாபமாய் இருந்தது. மாமியாரின் கையைப் பற்றி வருடி, ''மாமாவுக்கு நன்றாகிவிடும் அத்தை. கவலைப்பட வேண் டாம்'' என்று தேற்றினாள்.

பூமிநாதன் கண்விழித்ததும் அவர் பங்குக்கும் சுரபியின் விழிகளில் நீர் கசியச் செய்தார்.

அதே நினைவாக இருந்தவர் போல, மருமகளிடம் மன் னிப்பு கேட்டார் அவர். ''ரொம்பவும் தயவுபண்ணி என்னை மன்னித்துவிடம்மா. கதிர் மனம் இளகி வீட்டுக்கு வருகிறேன் என்ற நேரம். உண்மை தெரிந்தால் மீண்டும் முறுக்கிக்

கொண்டு போய்விடக் கூடாதே என்ற பயம் எனக்கு. என் சுயநலத்துக்காக உன் வாழ்வைப் பணயம் வைத்துத் தோற்றுப் போனேன். என் தோல்விகூடப் பெரிதல்ல, அம்மா. இந்த இளவயதில் உன் வாழ்வைக் கருக்கிவிட்டேனே!'' என்று கண்ணீர் வடித்தார்.

அவள் கையை லேசாக அழுத்தி, ''கருகுவானேன்?'' என்றான் கதிரவன்.

நம்பிக்கையும் பயமுமாக மகனை நோக்கினார் பூமிநாதன்.

அவர் அருகே அமர்ந்து, ''பிழைகள் புரிவதும் திருத்திக் கொள்வதும் நம் வீட்டில் பழக்கம்தான் அப்பா. ஒரே நாளில் எல்லாம் சீராகிவிட்டதாகச் சொல்ல மாட்டேன். ஆனால் நான் போய் அழைத்திருக்கிறேன். அழைத்ததும் மறுப்பில்லாமல் சுரபியும் வந்திருக்கிறாள். இதிலிருந்து தொடர்ந்து நல்லதாக இருக்க முயற்சி செய்வோம். இனி நீங்கள் வேறு எதையும் எண்ணி மனதை அலட்டிக் கொள்ளாமல் உங்கள் உடம்பைக் குணமாக்கிக் கொள்வதில் முழுக் கவனத்தையும் செலுத்துங்கள்'' என்றான்.

கண்டிப்பும் கரிசனமுமான அவனது குரல் அவரை அமைதிப்படுத்தியது.

அவர் அருகே இருந்தபடியே சுரபியிடம் பேசினான் கதிரவன். ''டப்''பில் குளித்தாயா, நேரமாகிவிடும் என்று 'ஷவரி'ல் குளித்துவிட்டு ஓடிவந்து விட்டாயா? 'டப்'பில் கொஞ்ச நேரம் கிடந்திருந்தாலும் கார்ப் பயண அலுப்புக்கு நன்றாக இருக்குமே?'' என்று வினவினான்.

ஒரு வினாடி திகைத்தபோதும் உடனே புரிந்து கொண்டாள் சுரபி. அந்த வீட்டில் 'பாத்டப்' வீட்டு உறுப்பினர்களின் அறைகளில் மட்டுமே உண்டு. இருவரும் பழைய மாதிரி ஒரே அறையில் தங்குகிறார்கள் என்று பெற்றவருக்கு உணர்த்த வேண்டுமாம்.

அது அவளுக்கு வெந்நீர் வசதி வேண்டும் என்பதற்காக அவன், தன் அறையில் அவளைக் குளிக்கச் சொல்லவில்லை!

உள்ளூரத் தோன்றிய சிறு ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு, ''சரியாக பத்து நிமிடம். மணி பார்த்துக் கொண்டே 'டப்'பில் கிடந்து விட்டு, மற்றவேலைகளைப் பரக்கப் பரக்க முடித்துக் கொண்டு ஓடிவந்தேன்'' என்று முறுவலித்தாள் சுரபி.

எதிர்பார்த்தது போலவே பெரியவரின் முகம் மேலும் தெளிந்தது.

இரவில் தனியே சந்தித்தபோது அதற்காக அவளுக்கு நன்றி சொன்னான் கதிரவன். ''ஆனாலும் எவ்வளவு இயல்பாக நடிக்கிறாய் சுரபி!'' என்று சற்று அதிகப்படியாகவே வியந்தான்.

பாராட்டுவது போல மட்டம் தட்டுகிறான் என்பதை உணர்ந்தாள் சுரபி. பெட்டியில் இருந்த பேஸ்ட், பிரஷ்சை எடுத்தபடி, ''என்னை விட நீங்கள்தான் நன்றாக நடித்தீர்கள். ஏன், ஒரு நாடகத்தையே உருவாக்கி நடத்தி முடித்து விட்டீர்களே!'' என்றாள் அவனது குரலிலேயே.

''நான்.. அப்பாவின் உடல்நிலைக்காக... ஓகே.. இருவருமே அப்பாவின் உடல்நிலைக்காகத்தான் நடிக்கும்படி ஆயிற்று'' என்று மனமற்று ஒத்துக் கொண்டான் கதிரவன். உடனேயே, ''இன்னொன்று, சுரபி. தொடங்கிவிட்ட நாடகத்தைக் குறிக்கோள் நிறைவேறும்வரை ஒழுங்காகவே நடத்தி முடிக்க வேண்டும். அதனால் நீ இந்த அறையிலேயே தங்குவதுதான் நல்லது. நான் சோபாவில்...'' என்றவனை இடைமறித்தாள் சுரபி.

''உங்கள் உயரத்துக்கு சோபாவில் படுப்பது சிரமம். அதனால் நான் அதில் படுத்துக் கொள்கிறேன்'' என்று முடித்து விட்டுக் குளியல் அறைக்குள் புகுந்தாள்.

திரும்பிவந்தபோது, சோபாவில் ஒரு விரிப்பும் தலையணையும் வைக்கப்பட்டிருந்தன.

வேறு பேச்சின்றி அதில் முடங்கினாள் சுரபி.

நாடகம் தொடர்ந்தது.

காலை, மாலை, இரவு என்று பூமிநாதனுக்கு இருவருமாகச் சேர்ந்தே காட்சி அளித்தனர். வந்தனர். சென்றனர்.

செல்வநாயகி மருமகளிடம் தனிமையில் அதிகம் பேசினாள்.

சுரபி என்ன செய்கிறாள், எப்படி ஏது என்று விவரம் விசாரித்தாள். இங்கே நடந்தவை பற்றிக் கூறினாள்.

ஒருநாள் திடுமென, ''கதிரவனுக்கும் உனக்கும் இன்னும் ஒன்றும் சரியாகவில்லை என்று எனக்குப் புரிகிறது, சுரபி. சீர்ப்படும் போலக் கொஞ்சமேனும் நம்பிக்கை இருக்கிறதாம்மா?'' என்று விசாரித்தாள்.

மெல்ல விழிகளை உயர்த்தி அவளை நேராக நோக்கினாள் சுரபி. ''அவர் குணம் உங்களுக்குத் தெரியும்'' என்றாள் ஒரு வருத்தமான முறுவலுடன்.

அதே முறுவலை எதிரொலித்து ஒத்துக் கொண்டாள் கதிரவனை மகனாகவே ஏற்று வளர்த்தவள். ''உன்னையும் தெரியும், அம்மா. நம் கணவன், எப்படியாவது கைக்குள் போட்டுக் கொண்டால் சரியாகிவிடும் என்று நீயும் கவுரவம் விட்டுக் கீழிறங்கி எதுவும் செய்ய மாட்டாய்'' என்று பெருமூச்சு விட்டாள். ''கடவுளாகப் பார்த்து ஏதேனும் செய்தால் தான் உண்டு'' என்றவள், சுரபியின் கையைப் பற்றி, ''சுரபி, எனக்கு ஒரு வாக்குத் தருவாயா? ஏதோ விதிப்பயனாய் எனக்கு ஏதேனும் ஆனாலும், பூமாவின் திருமணத்தை - முக்கியமாய் மாப்பிள்ளை பார்ப்பதை உன் பொறுப்பாய் ஏற்றுச் செய்வாயா? பிளீஸ்மா...'' என்று கெஞ்சுதலாகக் கேட்டுக் கொண்டாள்.

''உங்களுக்கு ஒன்றும் ஆகாது'' என்றாள் சுரபி புன்னகையோடு. ''அத்தோடு, நல்ல இடம் - பணக்காரர் விஷயம் பற்றி எனக்கு என்ன தெரியும், அத்தை?'' என்று இதமாய் மறுத்தாள்.

''பணக்காரர் விஷயமா?'' என்று பெருமூச்செறிந்தாள் செல்வநாயகி. ''பணக்காரர்கள் வீட்டில் நானும் நிறையவே பட்டுவிட்டேன், சுரபி. ஆனால் அதற்காக என் மகளைப் பணம் இல்லாத இடத்தில் கொடுக்க மாட்டேன்தான். நான் மனதைச் சொன்னேனம்மா. பையன், பையன் வீட்டார் நல்லவர்கள்தானா என்று நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும். செய்வாயா? செய்வேன் என்று சொல்லு'' என்று மீண்டும் மீண்டும் வேண்டி, சுரபியிடம் வாக்கு வாங்கிக் கொண்டாள் அந்த அம்மாள்.

இந்த வீட்டில் ஒவ்வொருவருக்காக வாக்குக் கொடுப்பதுதான் எனக்கு வேலையாக இருக்கிறது என்று அலுப்புடன் நினைத்துக் கொண்டாள் சுரபி. எந்த வாக்கும் உருப்படியாய் நடந்ததாகவே தெரியவில்லை. ஆனால் பூமாவின் வாழ்வு நல்லபடியாய் அமைய வேண்டும் கடவுளே என்று உளமார வேண்டிக் கொண்டாள் அவள்.

பூமிநாதன் ஒரு சீராய்த் தேறிவந்தார்.

இனிப் பயம் இல்லை; ஓரளவு வலுப்பெற்று விட்டார் என்று டாக்டர் கூறியதற்கேற்ப, பூமிநாதன் நடமாடத் தொடங்கியதோடு, தொழில் தொடர்பாக மகனிடம் பேசலானார்.

இனி விரல்விட்டு எண்ணக்கூடிய நாட்கள். இங்கிருந்து கிளம்பியாக வேண்டும். செல்வநாயகியின் இதமான அரவணைப்பு கிடைக்காது; அண்ணி அண்ணி என்று சுற்றிவரும், பூமாவின் அன்பு இராது. பூமிநாதன்... பிரியமான மாமனார் தான். ஆனால் அவர் ஓரளவு ஊகித்துவிட்டார் என்று சுரபிக்குத் தோன்றியது. எப்படியும் பழைய மூன்று மாதத் துள்ளலோடு இன்றைய அமைதியை ஒப்பிட்டுப் பார்க்கவும் தோன்றும் அல்லவா? அத்தோடு அவர் முட்டாளும் அல்ல.

இவர்கள் எல்லோரையும் விடக் கதிரவனைப் பிரிவதை எண்ணிப் பார்க்கையில் தான் அவள் மனம் தவியாய்த் தவித்தது. இத்தனைக்கும் பழைய கனிவையோ, காதலையோ அவன் கடுகளவு கூடக் காட்டினான் என்பதில்லை. அவ்வப்

போது அவனது வெறித்த பார்வையும், வெறுத்த வார்த்தைகளும் ஏன் இங்கு வந்தோம் என்று அவளை வேதனைப்படவும் வைத்தன. இதற்கு நேர்மாறாக முன்பு நேசம் காட்டிப் பழகியதை எண்ணி அந்த அன்புக்காகவும் அழைப்புக்காகவும் ஏங்கிய துன்பம் வேறு.

அப்படி இருந்தும் அவனைப் பார்க்கக் கூட முடியாதபடி மீண்டும் பிரிய வேண்டும் என்கையில் அவளுக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருந்தது. இரவில் அவனது ஆழ்ந்த சுவாசத்தைக் கேட்டபடி அசையாமல் இருப்பதும், அவ்வப்போது காற்றில் சன்னல் திரைகள் விலகும்போது உள்ளே வரும் அறைகுறை வெளிச்சத்தில் அவனது வரிவடிவைப் பார்ப்பதும் கூட முடியாமல் போகுமல்லவா?

பகலெல்லாம் சாதாரணமாக இருந்தாலும், இரவு வேளைகளில், கதிரவனின் பேச்சில் குத்தலும் குதறலும் அதிகம் இருப்பதை உணர்ந்ததால், இரவில் முடிந்த அளவு நேரம் செல்வநாயகியோடு கழித்துவிட்டுத் தாமதமாகவே படுக்கவரத் தொடங்கியிருந்தாள் சுரபி.

அன்று ஸ்டார் டி.வி.யில் ஏதோ நல்ல ஆங்கிலப்படம் ஒளிபரப்பானதால் அதைப் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு வழக்கத்துக்கும் தாமதமாகவே அறைக்குச் சென்றாள் சுரபி.

அன்று கதிரவனும் ஏதோ 'பிசினஸ் டின்னர்' என்று சற்றுத் தாமதமாகத்தான் திரும்பியிருந்தான். ஆனால் விளக்கைக் கூட அணைக்காமல், டை, ஷூ கூடக் கழற்றாமல் அப்படியே படுக்கையில் அலங்கோலமாய் விழுந்து கிடப்பான் என்று சுரபி எதிர்பார்க்கவில்லை.

சுளித்திருந்த புருவங்களைப் பார்த்ததும், சென்று பெரிய விளக்கை அணைத்து, விடிவிளக்கைப் போட்டுவிட்டு மீண்டும் கணவனிடம் சென்றாள்.

சற்றுநேரம் அவனைப் பார்த்துக் கொண்டே நின்றாள். ஒரு பெருமூச்சுடன் குனிந்து, அவனது காலணிகளைக் கழற்றினாள். கழுத்தை அழுத்திப் பிடித்திருந்த 'டை'யையும் அகற்றி விடுவது மேல் என்று தோன்றவும் குனிந்து 'டை' முடிச்சைத் தளர்த்தினாள்.

தளர்த்தியவள், கதிரவனின் கரங்கள் உயர்ந்து அவளை அணைக்கவும் திகைத்துப் போனாள்.

7

சுரபி பிரமித்து நின்றது சில கணங்களாகவும் இருக்கலாம்; சில நிமிடங்களாகவும் இருக்கலாம்.

''சுரபி.... என் கண்மணி.. அமுதசுரபி..''

அமுதசுரபி! காதல் மீறி அணைக்கும் போது அவளை அமுதசுரபி என்று அழைப்பான் கதிரவன். கண்ணே, கண்மணியே டியர், டார்லிங் எல்லாம் தண்ணீர் பட்டபாடாக இருந்த சில மாதங்களிலும்கூட இந்த 'அமுதசுரபி' தனிதான்.

அந்த அழைப்புடன் அவனது கரங்கள் அவளது செவி மடல்களையும் சங்குக் கழுத்தையும் வருடவும் சுரபி நிலை குலைந்து போனாள்.

ஆனால் இன்னொன்றையும் உணர முடிந்தது. அவன் பேச்சில் ஒரு குழறல் - மூச்சில் ஒரு நெடி... கதிரவன் குடித்திருக்கிறான்!

குடி மயக்கத்தில் இன்றைய நிலை மறந்து, பழைய நாட்களாக எண்ணி அவளை அணைக்கிறான்.

இந்தக் குடிமயக்கம் தீருகிற போது அவளை இன்னமும் மட்டமாக மதிக்கமாட்டானா?

கணவனின் கைகளில் நெகிழத் தொடங்கிய போதும், அவனை எழுப்ப முயன்றாள் சுரபி. ''கதிர்... கதிர், விழித்துக்

கொள்ளுங்கள். பாருங்கள், இது.. நான்.. இப்போது.. இப்போது நாம் பிரிந்து வாழ்கிறோம், கதிர்''

அவனது இமைகள் திறந்து, கண்கள் அவளை விழித்து நோக்கின. ''உஷ்.. மற. எனக்கு முடிகிறது... அவன் சொன்னது சரிதான்''

அவனது ஓர் இழுப்பில் சுரபி நிதானம் தவறி அவன் மேல் விழுந்தாள். வாகாக அவளைத் திருப்பி அணைத்தவன் அதற்கு மேல் அவளது இதழ்களுக்குச் சுதந்திரம் கொடுக்க வில்லை.

மறுநாள் சுரபி கண்விழிக்கையில் கதிரவன் குளியல் அறையில் இருந்தான்.

இவ்வளவு ஆசையை உள்ளே வைத்துக் கொண்டு அவளை வார்த்தைகளால் குதற அவனால் எப்படி முடிகிறது? அல்லது குடிவெறி இந்த ஆசைகளைத் தூண்டி விட்டு விடுமோ?

குளியல் அறையில் இருந்து உடை மாற்றிக் கொண்டு வந்த கதிரவன் அவளை நேரே பாராமலே வேகமாக வெளியே செல்லலானான்.

அவசரமாக அவள், ''கதிர்'' என்று அழைத்தது அவன் காதில் விழுந்த மாதிரியே தெரியவில்லை. அல்லது கேட்ட மாதிரி அவன் காட்டிக் கொள்ளவில்லை.

காலை உணவைக் கூட மறுத்துவிட்டுக் கதிரவன் வெளியே சென்று விட்டதை அறிந்த போது அவளுக்கு மேலும் நெஞ்சு கனத்தது.

அவளைப் பார்க்க அருவெறுத்துத்தான் ஓடுகிறானோ? இரவு அவனை அவள் எழுப்ப முயன்றது அவனுக்கு நினைவே இல்லையோ? குடியில் அவன் மதிமயங்கியிருந்த நிலையை பயன்படுத்திக் கொண்டாள் என்று கேவலமாக எண்ணிவிட்டானா?

தான் அவ்வளவு தரம் தாழ்ந்தவள் இல்லை என்பதை அவனிடம் தெரிவித்துவிட வேண்டும். தெரிவித்தபின் முடிந்த அளவு சீக்கிரமாக இங்கிருந்து கிளம்பிச் சென்றுவிட வேண்டும் என்று முடிவு செய்தாள் சுரபி. இதுபோல் நிகழ்ச்சிகள் தொடர்ந்தால் தன்மானம், தன் மதிப்பு இழந்து அவன் காலடியில் விழக்கூட நேர்ந்துவிடலாம். அது கேவலம்.

ஒன்று, அவளை அப்படியே அவளாக அவன் ஏற்க வேண்டும். அல்லது எதுவும் வேண்டாம்.

இரவு உணவு வேண்டாம் என்று கதிரவனின் அலுவலகம் மூலம் வீட்டுக்குத் தகவல் வந்தது.

இரவு வெகுநேரம் கழித்துத்தான் கதிரவன் வீடு வந்து சேர்ந்தான்.

அவன் வரவுக்காகக் காத்திருந்து, அவன் பின்னோடேயே சென்றவளுக்கு ஓர் அதிர்ச்சி.

கையோடு கொண்டு வந்திருந்த பெட்டியில் இருந்து ஒரு விஸ்கி பாட்டிலை எடுத்து டீபாய் மேல் வைத்துக் கொண்டிருந்தான் அவளுடைய கணவன்.

''கதிர், என்ன இது?'' என்றாள் அவள் பதட்டத்துடன். ''நேற்றும் நீங்கள் குடித்திருந்தீர்கள், கதிர். இப்போது வீட்டிற்கே கொண்டு வந்திருக்கிறீர்கள். பழகிவிடாதீர்கள், பிளீஸ்...''

அவன் பாட்டிலையே பார்த்தபடி நின்றான். ''மது நிறைய விஷயங்களை - பிடிக்காததை எல்லாம் மறக்கடித்து விடும் என்று லால்சந்த் சொன்னான். நேற்றுக் குடித்துப் பார்த்தேன். அவன் சொன்னது உண்மைதான். மறக்க முடிந்தது''

''நேற்று உங்களை நான் எழுப்ப... உங்களுக்கு நிகழ் காலத்தை அறிவுறுத்த முயன்றேன், கதிர்'' என்றாள் சுரபி சிறுகுரலில்.

''தெரியும்'' என்றான் கதிரவன். ''என் குடிமயக்கத்தை நீ பயன்படுத்திக் கொண்டதாக ஒருபோதும் நான் நினைக்க

வில்லை. அந்த அளவு ஒன்றுமே தெரியாது போய்விடும் அளவு நான் மொடாக்குடி குடிக்கவில்லை. ஆனால் முழு நினைவில் மறக்க முடியாததை எல்லாம் இந்த மயக்கத்தில் ஒன்றுமில்லை என்று ஒதுக்க முடிந்தது. ஒதுக்கி, தாங்க முடியாத எத்தனையோ தவிப்புகளை நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது. இப்படியே வாழ்ந்து விடலாம் என்றுதான் இன்றும் வாங்கி வந்தேன்...'' என்று தண்ணீர் கூஜாவின் மேல் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த தம்ளரை எடுத்து வந்தான் கதிரவன்.

முகம் சிவப்பேற, பேச்சிழந்து நின்றாள் சுரபி. இவன் - அவளுக்குத் தாலி கட்டிய கணவன் - என்ன சொல்கிறோம் என்று தெரிந்துதான் சொல்கிறானா?

தெரிந்தே சொன்னதைத் தெளிவாகவும் சொன்னான் அவளுடைய கணவன்.

'இதைக் குடித்துவிட்டால், மற்றதெல்லாம் மறந்தே போகிறது. நீ என் மனைவி, அருகில் இருக்கிறாய் என்பது மட்டும்தான் நினைவில் நிற்கிறது'' என்று பாட்டிலைத் திறந்து தம்ளரில் விஸ்கியை ஊற்றினான் - அவன்.

மற்றதை மறந்தால்தான் மனைவியாகப் பார்க்க முடிகிறதாமா? என்ன அவமானம்?

''இதையே இன்னும் கொஞ்சம் அருந்தினால் எனக்கும் இன்னொருத்திக்கும்கூட வித்தியாசம் மறந்துவிடும். நீங்கள் அதற்கு முயற்சியுங்கள்'' என்று கொதிப்புடன் உரைத்து விட்டு, அந்த அறையை விட்டு வெளியேறினாள் சுரபி.

அவனது அழைப்பு காதில் விழுந்தும் திரும்பிக்கூடப் பாராமல் வேறு ஓர் விருந்தினர் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

அன்றிரவும் அவளால் தூங்க முடியாமல் போயிற்று.

ஒருசமயத்தில் அவள் பிழை செய்தாள் என்று கதிரவன் அவளை ஒதுக்கினான்தான். ஆனால் அப்போதும் கவுரவக் குறைவாக நடத்தியதில்லை. 'நீ செய்த பிசகு என்னால் ஒத்துக் கொள்ள முடியாதது. பிரிந்துவிடு' என்று பிரிந்தானே தவிர, அவளை இழிவுபடுத்தியதில்லை.

தாங்க முடியாத தவிப்புகள் அவனுக்கு மட்டும்தானா? அவளுக்கு இல்லையா? அவளும் உயிரும் உணர்ச்சியும் உள்ள மனிதப் பிறவிதானே? ஒரே அறையில் எப்படி அடக்கி வாழ்கிறான். இப்படியே வாழ்ந்துவிடலாம் என்று வேறு எண்ணமா?

கோபப்பட்டு, குமுறி, கடைசியாகக் கண்ணீரில் இரவைக் கரைத்தாள் சுரபி.

மறுநாள் காலை எழுந்ததுமே செல்வநாயகியைத் தேடிச் சென்று தன் முடிவைக் கூறினாள்.

தன்னால் ஆனமட்டும் தடுக்க முயன்றுவிட்டுக் கடைசியாக, ''உன் விருப்பம். ஆனால் எனக்குக் கொடுத்த வாக்குறுதியை மட்டும் மறந்துவிடாதே'' என்றாள் மாமியார்.

காலை உணவின் போது, எல்லார் முன்னிலையிலும் அன்று கிளம்பப் போவதாக அறிவித்தாள் சுரபி.

ஏற்கனவே மனைவி தயார்ப்படுத்தி இருந்ததால் பார்வையோடு நிறுத்திக் கொண்டார் பூமிநாதன்.

''ஊகும்... கூடாது'' என்று குதித்த மகளை அடக்கினாள் தாயார்.

கதிரவன் தலைநிமிரவே இல்லை.

காரணம் புரிந்திருக்குமல்லவா என்று கசப்புடன் எண்ணினாள் சுரபி.

மீண்டும் காலம் நத்தை வேகத்தில் ஊர்ந்தது. ஒரு மாதம் சென்றது, ஒரு யுகமாகத் தோன்றியது சுரபிக்கு.

தீபாவளி, பொங்கல் போல ஏதாவது வேலை உளுக்கெடுக்கிற சீசனாக இருந்தால் நன்றாயிருக்குமே என்று ஏங்கினாள். விழாக் காலங்கள் எல்லாம் முடிந்து விற்பனை டல்லடிக்கிற சமயமாக வேறு இருந்தது அவளுக்கு மேலும் துன்பமாக இருந்தது.

இம்முறை வந்ததிலிருந்தே ஏக்கத்திலும் வேதனையிலுமாக எதையும் செய்யவோ, உண்ணவோ மனமில்லாது போயிற்று.

முன்னொருதரம் அனுபவித்ததுதானே! சில நாட்களில் இந்த வேதனையின் வலு குறைந்து பசி தாகம் போன்ற உணர்ச்சிகள் எல்லாம் தோன்றிவிடும் என்றிருந்தால் இந்தத் தடவை அப்படி நடக்கவே இல்லை.

பசி அடியோடு மந்தித்து, நாள் முழுவதும் சோர்வும் அலுப்புமாய் ஓய்ந்து போனாள் அவள்.

பிடிவாதமாய் ஆதிமூலம் உண்ண வைத்த மதிய உணவு மட்டும் இல்லை என்றால் பட்டினியிலேயே செத்துக்கூடப் போயிருப்பாள்.

அதிலும் காலைவேளைகள் பெரும் சோதனையாகிப் போயின.

அன்று எழுந்து பல் துலக்கியவள் தலைசுற்றிக் கொண்டு வரவே மீண்டும் படுத்துவிட்டாள்.

மீண்டும் அவள் கண்விழித்து எழுந்தபோது மணி எட்டரை. இன்னமும் அரை மணி நேரத்திற்குள்ளாக அவள் கடையில் இருக்க வேண்டும்.

வாயிலில் சைக்கிள் ரிக்ஷாவின் மணிச் சத்தம் கேட்டது.

அடுத்த தெருவில் இருக்கும் பள்ளிக்கு வீட்டுக்காரருடைய மகள் அர்ச்சனாவைக் கூட்டிச் செல்ல வந்த வண்டி. அதையே திரும்பவும் வந்து தன்னைக் கடைக்கு அழைத்துச் செல்லும்படி கூறலாம் என்று எண்ணி, எங்கெங்கோ பறந்த கை கால்களைச் சிரமத்துடன் கட்டுப்படுத்தி, நடந்து வந்து, கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள் சுரபி.

மகளின் குண்டுக் கன்னத்தில் முத்தமிட்டு, அவளைப் பள்ளிக்கு அனுப்பிக் கொண்டிருந்தாள் தாயார்!

ஏதோ பொறிதட்டியது சுரபிக்கு.

இந்தச் சோர்வும், அலுப்பும், பசியின்மையும், காலை வேளைகளில் கிறுகிறுப்பும்!

கடவுளே, என்ன இது?

மூன்று மாதங்கள் வேளை, நேரம் பாராமல் கூத்தடித்த போது வராதது அன்று ஒருநாளிலா?

சுரபிக்கு அழுவதா சிரிப்பதா என்றே புரியவில்லை.

தனக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது; அதுவும் அவளது உயிரிலேயே கலந்துவிட்ட கதிரவனுடைய குழந்தை என்கையில் அவளுக்கு உடம்பெல்லாம் பூரித்துப் போயிற்று. ஆனால் இருவரும் பிரிந்து வாழும் விதத்தை நினைக்கையில் அவள் மனம் சோர்ந்தது.

இதைச் சாக்கிட்டு இணைவது என்றால் அதையும் அவமானமாக உணர்ந்தாள்.

குழந்தை விஷயம் தெரிந்தால், அதன்பின் அவளைத் தனித்திருக்க விடுவார்களா என்பதும் சந்தேகம். பத்து மாதம் சுமந்து பெறுகிறவள் பெண் என்றாலும், வித்தைக் கொடுத்த ஆணின் வாரிசாகத்தானே குழந்தை கருதப்படுகிறது?

என் வாரிசு என்று கதிரவனும், எங்கள் வீட்டு வாரிசு என்று பூமிநாதனும் உரிமை கொண்டாடி வரலாம். வரலாம் என்ன? நிச்சயமாய் வருவார்கள். அதில் சந்தேகப்படவே தேவையில்லை.

இவர்கள் அறியாமல் எங்காவது சென்று மறைந்து வாழ்ந்து பிள்ளையைப் பெற்று வளர்க்கலாம் என்றாலும் 'அப்பா பேர் தெரியாத பிள்ளை' என்று அவப்பெயராகி விடும்! அங்கே அவளது ஒழுக்கமே கேள்விக்குறியாகிப் போகும். மகாக் கேவலம்.

எவ்வளவு சிக்கல் இந்தக் குழந்தை உருவானதில்?!

ஆனால் அத்தனைக் குழப்பங்களுக்கிடையிலும் உள்ளூர ஒரு பெருமிதம் உருவாவதைச் சுரபியால் உணர முடிந்

தது. இருக்கட்டும். இந்தப் பொக்கிசம் பற்றிய விவரம் இப்போதைக்கு அவளுக்குள்ளேயே இரகசியமாக இருக்கட்டும்.

அமைதியாக ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்கும்வரை அடுத்தவர் யாரும் அறிய வேண்டாம். பிறகு.. யாரும் அறியாமல் செல்வநாயகியிடம் மட்டும் எப்படி நடந்து கொள்வது நல்லது என்று கேட்க வேண்டும்.

அன்று மிகவும் தாமதமாக அவள் வேலை செய்யும் கடையை அடைந்த போது, நிர்வாகி ஆதிமூலம் மிகவும் பரபரப்புடன் வெளியே வந்து கொண்டிருந்தார்.

''அப்பாடி, வந்தாயேம்மா. இன்னும் கொஞ்ச நேரம் ஆகியிருந்தால் உன்னைத் தேடி நானே வந்திருப்பேன்'' என்றார் பதட்டமான குரலில்.

'மலையசைந்தாலும் நிலை கலங்காத' டைப் மனிதர் ஆதிமூலம். அவரிடம் பதட்டத்தைக் காணவும் சுரபியும் கலக்கமுற்றாள்.

''என்ன சார்? என்ன விஷயம்'' என்று அச்சத்துடன் விசாரித்தாள்.

''மெட்ராசிலிருந்து போன் வந்ததம்மா. உன் புருஷன் தான் பேசினார். உன்னை உடனே வரச் சொன்னார். அங்கே உன் மாமியார் ரொம்ப சீரியசாக இருக்கிறார்களாம்!''

செய்தி கேட்டதும் சற்றுநேரம் செயலிழந்து நின்றாள் சுரபி.

8

எந்த ஒரே பிறவி, தன் இரகசியம் தெரிந்தால் கலப்பட மற்ற ஆனந்தம் அடையக்கூடும் என்று சுரபி நினைத்தாளோ அந்த செல்வநாயகி கவலைக்கிடமான நிலையில் இருக்கிறாளா!

அனாதைப் பெண் என்கிற எண்ணமே இல்லாமல் இருகரம் நீட்டி அவளை வரவேற்றவள், பெற்ற பெண் போல அவளிடம் பிரியம் காட்டியவள்; அவளுக்கு ஆபத்தா?

என்ன... சட்டென அவள் பெற்ற வாக்குறுதி சுரபிக்கு நினைவு வந்தது. செல்வநாயகிக்கு ஏற்கனவே ஏதேனும் நோய் இருந்ததா? கடவுளே, கடவுளே அவள் வாக்கு கேட்ட போது சுரபி அந்த மாதிரி யோசிக்கவே இல்லையே!

உள்ளே உள்ளே ஏதேதோ எண்ணங்கள் ஓட, நிலை யிழந்து தடுமாறினாள் சுரபி.

அவசரமாக அவள் அருகே வந்து, ''சுரபி.. சுரபி.. இதோ பார்.. முதலில் உட்கார்...'' என்று ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அவளை உட்கார வைத்தார் ஆதிமூலம். ''ஏ.. யாராவது ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டாங்கம்மா.. முரளி.. டேய் முரளி.. அவசரத்துக்கு எங்கேடா போய்த் தொலைந்தாய்? போய்ப் பக்கத்து ஓட்டலில் நிறையச் சீனி போட்டு ஒரு டீ வாங்கிக் கொண்டு ஓடிவா.. ஜல்தி.. இரண்டே நிமிடத்தில் டீ வந்தாகணும்'' என்று அகப்பட்டவர்களை எல்லாம் அதட்டினார்.

தண்ணீர் கொண்டு வந்த பெண்ணிடம், விரலை நனைத்துக் கண் மேலும் நெற்றியிலும் தடவி, ''மேகலை'' என்றார்.

அவள் அதுபோலச் செய்ய, ''சுரபி.. அம்மா சுரபி...'' என்று குரலை உயர்த்தி அழைத்தார்.

சுரபியின் மயக்கம் வந்த விரைவிலேயே தெளிந்துவிட, நிமிர்ந்து, ''அத்தைக்கு என்ன சார்?'' என்றாள் பலவீனமான குரலில்.

''என்னவாக இருந்தாலும் அதற்காக நீயும் விழுந்து மண்டையை உடைத்துக் கொள்ளுவாயா?'' என்று அதட்டினார் ஆதிமூலம்.

''இல்லை சார்... அத்தை''

''உங்கள் அத்தைக்கு உடம்பு அவ்வளவாகச் சரியில்லை என்று மட்டும்தான் உன் வீட்டுக்காரர் சொன்னார். அதற்குள்

நீ வேறு எதையாவது இழுத்துக் கொண்டாயென்றால் நாளைக்கு அவருக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்'' என்று பொருமியவர், அதற்குள் முரளி டீயுடன் வந்துவிட, ''முதலில் இதைக் குடி. ரொம்பச் சூடாயிருந்தால் ஆற்றிக் கொடுடா...'' என்று பையனையும் ஏவினார்.

கசந்த வாய் நினைவுவர, ''எனக்கு டீ வேண்டாம்..'' என்றாள் சுரபி.

அவ்வளவுதான். ஆதிமூலம் ஆத்திரத்துடன் கத்தத் தொடங்கி விட்டார். ''ஆமாம், நீ உன் மனதில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்? சோறு தண்ணி ஒன்றுமில்லாமல் அன்று கண்டமேனி அழியாமல் நிற்க நீ என்ன கடவுளா? முன்னாடியே மெலிந்திருந்தாய். இப்போது சென்னை சென்று வந்தபிறகு இன்னமும் ஒடுங்கி, உடம்பில் எலும்புக்கூடு மட்டும்தான். அதற்குமேல் ஒரு தோலைப் போர்த்திக் கொண்டு, அதற்கு மேலே ஒரு சேலையைச் சுற்றிக் கொண்டு கண்ணில் மட்டும் உயிரை வைத்துக் கொண்டு நிற்கிறாய். இந்தப் பக்கம் என் மகளானால், 'சுரபியும் உங்களுக்கு என்னைப் போலத் தான் அப்பா. நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று வாரா வாரம் வரைந்து தள்ளுகிறாள். அந்தப்பக்கம் உன் கணவர் வேறு...'' என்றவர் சட்டெனப் பேச்சை நிறுத்தினார்.

''கணவர் வேறு...?'' என்று சிறு வியப்புடன் வினவினாள் சுரபி.

''அது.. அது.. வந்து.. உன் கணவர் உன்னை உடனே கூட்டிவரச் சொன்னார். உன் மாமியார் உன்னைப் பார்க்க.. உன்னைக் கேட்டிருப்பார்கள் போல. நீ முதலில் இந்த டீயைக் குடி. உடனே கிளம்புகிற வழியைப் பார்'' என்று விரட்டினார் ஆதிமூலம்.

அவர் ஏதோ மறைக்கிறார் என்று சுரபிக்குத் தோன்றியது. ஆனால் செல்வநாயகியின் உடல்நிலை பற்றிய கவலை மேலோங்கி அதை மறக்கடிக்க, ''எப்படிப் போவது சார்... ரெயிலில் என்றால் இப்போது ரெயில் கிடையாதில்லையா?

இரவுதான். பஸ் ஏதாவது இப்போது கிளம்புமா சார்? அது கூடச் சாயங்காலத்துக்கு மேல்தானே இருக்கும். வேறே ஏதாவது 'விங்க்' பஸ் இருக்குமா? யாருக்காவது தெரியுமா?'' என்று விசாரித்தாள் அவள்.

''பஸ் ரெயில் ஒன்றும் வேண்டாம். ஒரு டாக்சி பிடித்து உன்னையும், உனக்குத் துணையாக என்னையும் வரச் சொன்னார். டாக்சி வாடகை அவர் அங்கே கொடுத்து விடுவதாகச் சொன்னார். நான் திரும்பி வருகிற செலவும் அவரதுதானாம். சரி, உனக்குத் துணை வந்தமாதிரியும் ஆயிற்று. அங்கே நந்தினியைப் பார்த்து வந்தாற்போலவும் ஆயிற்று. பெரிய முதலாளியிடம் என் லீவுக்கு சொல்லி விட்டேன். டாக்சிக்கும் சொல்லி விட்டேன். இதோ வந்துவிடும். டாக்சி வந்ததும் அதிலேயே போய் உன் ரூமுக்குப் போய் வேண்டியதை எடுத்துக் கொண்டு கிளம்பி விடுவோம். சரிதானா?''

''சரிதான்'' என்றாள் சுரபி.

வாடகைக்கார் வந்ததும் ஓடுஓடு என்று சாமான்களை எடுத்துக் கொண்டு இருபதே நிமிடங்களில் கார் சென்னை செல்லும் பாதையில் வேகமாகச் செல்லத் தொடங்கி விட்டது.

கதிரவனுக்கு ஒருதரம் டெலிபோன் செய்து செல்வ நாயகி பற்றி மேலும் விவரம் கேட்கலாமா என்று ஒருதரம் யோசித்தாள் சுரபி.

ஆனால் அந்த விவரம் சொல்ல வீட்டில் யாராவது - பூமிநாதன், கதிரவன், பூமா என்று யாராவது இருக்கிறார்களோ, இல்லையோ என்று சந்தேகம் வந்தது. எல்லாருமே மருத்துவமனையில் காத்துக்கிடக்கலாம் இல்லையா?

கவலைக்கிடம் என்றால் குடும்பத்தினர் நோயாளியின் அருகில் இருப்பதுதான் இயற்கை.

வேலையாட்களுக்கு முழுவிவரம் தெரிந்திருப்பது சாத்தியமல்ல என்று தோன்றவே டெலிபோனில் வேறு நேரத்தை வீணாக்காமல் கிளம்பி விட்டாள் சுரபி.

செல்வநாயகிக்குக் குணமாகிவிட வேண்டும் என்று அவ்வப்போது கடவுளை வேண்டிக் கொள்வது தவிர வேறு வேலையின்றி அமர்ந்திருக்கையில் சுரபிக்கு மீண்டும் ஞாபகம் வந்தது.

ஆதிமூலத்திடம் திரும்பி, ''நந்தினி கடிதத்துக்குப்பிறகு, உன் கணவர் வேறு' என்று ஏதோ சொல்லத் தொடங்கினீர்களே, என்ன சார்?'' என்று விசாரித்தாள்.

''அது.. அதுதான் அப்போதே சொன்னேனே''. அவர் சமாளிக்க முயன்றார்.

''இல்லை. நீங்கள் கூற வந்தது அதுவல்ல''.

''சொல்லுங்கள் சார், நீங்கள் அவரை எப்போது சந்தித்தீர்கள்? அவர் என்ன சொன்னார்?'' என்று விடாமல் வினவினாள் அவள்.

அவள் விடமாட்டாள் என்று உணர்ந்து, உண்மையைச் சொன்னார் ஆதிமூலம். ''அவரை நான் சந்திக்கவில்லை, சுரபி. நீ மீண்டும் திரும்பி வந்தாயே, அதற்கு மறுநாள் அவர் எனக்கு டெலிபோன் செய்து பேசினார். முதல்தடவை நீ இங்கே வந்தபின் மிகவும் மெலிந்து விட்டாயாம். விட்டாயாம் என்ன? மெலிந்துதான் போனாய். கண்ணிருக்கிற எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். அதுமாதிரி திரும்பவும் நேர்ந்து விடாமல் முடிந்தவரையில் பார்த்துக் கொள்ளும்படிச் சொன்னார்.

அவர் இங்கேவந்தபோது பார்த்த அளவில் நீ வீட்டில் சமையல் என்று நல்லபடியாக ஏதும் செய்து சாப்பிடுவது போலத் தெரியவில்லையாம். அதனால் மதியச் சாப்பாட்டையாவது எப்படியாவது கடையில் ஒழுங்காகச் சாப்பிடும்படி செய்யச் சொன்னார். செலவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; எவ்வளவு ஆகிறது என்று எழுதினால் மாதா மாதம் பணம் அனுப்பி வைப்பதாகச் சொன்னார்.

''நீ கவனித்ததாகத் தெரியவில்லை, சுரபி. ஆனால் உனக்கு மதியச் சாப்பாடாகப் பெரிய ஓட்டலில் இருந்து 'மினி லஞ்ச்' தான் தருவித்துத் தந்தேன்...''

சுரபி கவனிக்கவில்லை தான். கவனிக்கும் அளவு உணவில் அவள் கவனம் இருக்கவும் இல்லை. இப்போது யோசித்துப் பார்க்கையில், அலுமினியம் 'பாயி'லில் அழகாக வைக்கப்பட்டிருந்த சாப்பாடு நினைவு வந்தது. இது எவ்வளவு விலை இருக்கும் என்றுகூட யோசிக்கவே தோன்றவில்லையே.. ஆனால் உள்ளூர அரித்த வேதனை தவிர வேறு எதை யோசிக்கவும்தான் அவள் மனதில் இடம் இருக்கவில்லையே.

அவளது உடல்நலத்தில் இவ்வளவு அக்கறை காட்டுகிறவன் மனதை இப்படி நோகடித்து விட்டானே!

ஆதிமூலம் திரும்பவும் பேசினார். ''நீ ரொம்பவும் ரோசக்காரி. அவர் பணம் கொடுக்கிற விஷயம் தெரிந்தால் சாப்பாடு வேண்டாமென்று கூட நீ சொல்லிவிடக்கூடும். அதனால் உன்னிடம் சொல்ல வேண்டாம் என்றும் கூறினார். ஆனால், புருஷன் பெண்டாட்டிக்குள் அப்படி என்னம்மா ரோசம்? அதுவும் இப்படிப் பேணுகிற புருசனோடு உனக்கு என்ன தகராறு?''

உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாதிருந்தாள் சுரபி. மற்றபடியும் இவரிடம் என்னவென்று சொல்வது? 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன்' என்று போதிக்கக்கூடிய, ஓரளவு பழங்கால மனிதர். கதிரவன் வேறு இவ்வளவு உருக்கிக் காட்டி இருக்கிறானே!

பதிலுக்காகச் சில கணங்கள் காத்திருந்து விட்டு மீண்டும் அவரே பேசினார். ''நீ வேலை செய்கிற இடத்தில் உனக்கு நான் மேல் அதிகாரி. அவ்வளவேதான். உன் சொந்த விஷயத்தில் தலையிட எனக்கு உரிமை கிடையாதுதான். ஆனால் நந்தினி எழுதி, எழுதி எனக்கு உன்மேலும் ஒரு பிரியம், பரிவு உண்டாகி விட்டது. அதனால் தான் உன் வாழ்வு சீர்பட்டுவிடக் கூடுமே என்று ஒரு நல்லெண்ணத்தில்தான் கேட்கிறேன், சொல்லம்மா'' என்றார் ஆதிமூலம் குரலில் பரிவும் பரிதாபமுமாக.

அன்புதான் மனிதரை மிகவும் துன்புறுத்துவது என்று நினைத்தாள் சுரபி. இப்போது இவரிடம் முகத்தில் அடித்தாற் போல உங்கள் வேலையைப் பாருங்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? கூடவே, கதிரவனுக்கும் அவளுக்கும் இடையே உள்ள பிணக்கை இவரிடம் சொல்வதும் கடினம்; சொன்னால் அதைப் புரிந்து கொள்வது அவருக்கும் கடினம்.

ஒரு பெருமூச்சுடன் ''தலைவிதி'' என்றாள் சுரபி. ''அவன் கால்பட்டழிந்தது அன்று பிரமன் என் தலை மேல் எழுதிய எழுத்தே'' என்று எங்கள் ஆசிரமத்தில் பாடுகிற ஒரு முருகன் பாட்டில் வரும். அந்த மாதிரி, அந்த முருகனாகப் பார்த்து ஏதாவது செய்தால்தான் உண்டு சார். மற்றபடி மனிதரால் ஆகக்கூடியது ஒன்றும் இல்லை'' என்று முடித்தாள் சுரபி.

மேலும் ஏதோ சொல்ல வாயெடுத்து விட்டு, சுரபியின் கெஞ்சுதலான பார்வையில் வாயை மூடிக் கொண்டார் ஆதிமூலம். அவரும் அந்த முருகனையே வேண்டுவது போல மேல் நோக்கிவிட்டு, ஒருதரம் கண்மூடித் திறந்ததோடு சரி.

மாலைக்குள் சென்னை கொண்டு சேர்த்து விட்டார் டாக்சி டிரைவர்.

நேரே வீடு சென்றனர்.

சுரபி நினைத்தது போல வீட்டில் வேலையாட்கள் மட்டும்தான் இருந்தனர். வீட்டுக் காரியக்காரர் கூட மருத்துவமனையில் தான் இருந்தார்.

எந்த மருத்துவமனை என்று விசாரித்து அறிந்து கொண்டு அங்கே சென்றனர்.

செல்வநாயகியின் அறைக்கு வெளியே 'காரிடா'ரில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான் கதிரவன்.

அவன் முகத்தைக் கண்டதும், ''கதீர்!'' என்று சுரபி அவனிடம் விரைய, பொது இடம் என்பதையும் மறந்து, போவோர் வருவோர், சுரபியின் பின்னோடு வந்த ஆதிமூலம் யாரையும் பொருட்படுத்தாமல் சுரபியைத் தாவி அணைத்துக் கொண்டு அழுதுவிட்டான் கதிரவன்.

''மெல்லிய மூச்சு தவிர அசைவே இல்லாமல் அம்மாவைப் பார்த்தது என்னால் தாங்க முடியவில்லை. சுரபி!''

அம்மா!

திருமணமாகி வந்ததிலிருந்தே கதிரவன் தன்னை 'அம்மா' என்று அழைத்து மகிழ்வித்ததாகவும், பிறகு நேர்ந்த சிக்கலின் பின் 'சின்னம்மா' என்று குறிப்பிட்டு வேதனைப்பட வைத்ததாகவும் செல்வநாயகி சுரபியிடம் சொன்னதுண்டு. பின்னர் வீடு திரும்பிய பிறகும், பொதுப்படையாக ஏதாவது சொல்வானே தவிர, செல்வநாயகியை 'அம்மா' என்று அவன் அழைத்ததே இல்லை.

மூத்தாள் பிள்ளையைப் பாசம் வைத்து வளர்த்த செல்வநாயகிக்கு இது பெரும் வேதனை. வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் மாமியாரின் மனதுள் இருந்த துக்கம் பற்றி சுரபி அறிவாள்.

இப்போது தான், மீண்டும் அம்மா ஆகிவிட்டதை அத்தை அறியக்கூடுமா?

''அத்தை இப்போது எப்படி இருக்கிறார்கள்?'' என்று கணவன் முதுகை ஆறுதலாக வருடியபடி விசாரித்தாள் சுரபி.

கணவன் - மனைவியின் நிலையில் திருப்தியுற்றவராக அவர்களது பேச்சில் இடையிடாமல் மெல்ல ஒதுங்கினார் ஆதிமூலம்.

''அம்மாவுக்கு ஒரு பெரிய அறுவை சிகிச்சை செய்ய வேண்டியதாயிற்று, சுரபி. 'எமர்ஜென்சி' ஆபரேஷன். நாலு மணி நேரம் நடந்தது. இப்போதுதான் ஆபரேசன் தியேட்டரிலிருந்து அறைக்குக் கொண்டு.. கூட்டிவந்து அரை மணி நேரம் ஆகிறது. சிக்கல் எதுவும் நேராவிட்டால் அனேகமாகப் பிழைத்துவிடுவார்கள் என்கிறார்கள். ஆனால் அந்தச் சிக்கல் என்ற வார்த்தையும், அம்மா இருக்கிற நிலையும்தான் அச்சமூட்டுகிறது. வாயேன், போய்ப் பார்க்கலாம். எனக்குத் தனியாக அறைக்குள் போகக்கூடப் பயமாக இருக்கிறது...''

கடுகளை எல்லாம் ஆற்று வெள்ளம் அடித்துச் செல்வது போல இடைப்பட்ட வேறுபாடுகள் எதுவும், இன்றையத் துன் பத்தின் முன் இருவருக்குமே நினைவு வரவில்லை.

அவன் சொன்னது போலவே கிழிந்த நாராகத்தான் கட்டி லில் செல்வநாயகி கிடப்பதைக் காண, சுரபிக்கும் நெஞ்சுக்குள் ஏதோ பிசைந்தது.

மூக்கிலும், கையிலுமாகப் பொருத்தியிருந்த குழாய்கள் வேறு பயமுறுத்தின.

மனைவியின் ஒருபுறமாய், நாற்காலி ஒன்றைக் கட்டி லுக்கு மிக அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தி ருந்தார் பூமிநாதன்.

மகனையும் மருமகளையும் கண்டதும் உதடு துடிக்க ஏதோ சொல்ல முயன்றவருக்கு வார்த்தைக்குப் பதிலாகக் கண்ணீர்தான் வந்தது.

செல்வநாயகியின் மறுபுறமாய், நோயாளியின் நாடித்து டிப்பில் கை வைத்தபடி அமர்ந்திருந்த நர்சு, பூமிநாதனைக் கடிந்தார். ''என்ன சார், நீங்கள்? உங்கள் வீட்டம்மாவுக்கு 'பல்ஸ்' நன்றாகவே பலப்பட்டு விட்டது. அவரைக் கொல்ல இருந்த ஆபத்தை அறுத்து எறிந்து விட்டோம். பிரமாதமாய்க் குணமாகிக் கொண்டு இருக்கிறார்கள். இப்போது போய் அழ லாமா?'' என்று சொல்லி அருகிலிருந்த கதிரவனிடம் ''வா ருங்கள் சார், வந்து உங்கள் அப்பாவுக்குத் தைரியம் சொல்லுங் கள். உங்கள் தாயார் விழித்து எழுகிற போது உங்கள் அப்பா வின் அழுத முகத்தையா பார்ப்பது?'' என்று மெல்லிய குரலில் கண்டிப்பும், கனிவுமாகப் பேசினார்.

நர்சு அதட்டிப் பேசப் பேச, அவர்கள் மூவருக்குமே ஏதோ ஒரு மனோதிடம் உண்டாயிற்று.

விடாமல் பற்றியிருந்த கதிரவனின் கையை லேசாக அழுத்திவிட்ட சுரபி, சுற்றுமுற்றும் நோக்கி, ''பூமா எங்கே?'' என்று வினவினாள்.

''எனக்கே இந்த நிலை என்றால் அவள் என்ன ஆகியி ருப்பாள்? அம்மாவை 'ஸ்டிரெச்ச'ரில் பார்த்ததுமே, மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள். மயக்கம் தெளிந்த பிறகும் ஒரேய டியாகக் கதறி அழத் தொடங்கி விட்டாள். வேறு வழியில்லா மல் அவளுக்கு ஏதோ 'செடேட்டிவ்' கொடுத்து இன்னோர் அறையில் உறங்க வைத்திருக்கிறார்கள். யம்மா! ஏதோ பயங் கரக் கனவு போல இருக்கிறது!'' என்றான் கதிரவன். ''என் னவோ, நீ வரும்வரை எனக்கு மிகவும் பயமாக இருந்தது, சுரபி'' என்றவனுக்கு மனைவியின் நலத்தில் அக்கறை பிறந் தது.

''இடையில் நில்லாமலே வந்திருப்பாய் போல் தெரிகி றதே, சுரபி, உடம்பு அலுப்பாய் இருக்கிறதா? ஆள் ரொம்ப வும் சோர்ந்து தெரிகிறாயே!'' என்றான் கரிசனமாக.

''எனக்கு ஒன்றும் இல்லை. இன்று நான் குளிக்கக்கூட இல்லை. அதனால்தான் சோர்வாய் தெரிகிறது'' என்று புன் னகை செய்தாள் சுரபி.

''சிஸ்டர், நாங்கள் இரண்டு பேரும் சற்று வீடு வரை போய் வரலாமா? அம்மாவுக்கு..''

''தாராளமாய்ப் போய் வாருங்கள். இனி உங்கள் அம்மா இருக்கிற அறைக்கு அடுத்த அறைப்பக்கம் வரக்கூட யமன் பயந்து நடுங்கி ஓடிவிடுவான்'' என்று முறுவல் செய்தார் நர்சு.

தந்தையிடம் சொல்லிக் கொண்டு, தூங்கிய பூமாவைப் பார்த்துவிட்டு, வீடு சென்ற பின், கதிரவன் தந்த விவரங்கள் சுரபியைத் திகைக்க வைத்தன.

9

வீட்டிற்குப் போக வேண்டும்; சென்று களைப்பு தீர சுரபி ஓய்வெடுக்க வேண்டும் என்று கதிரவன் நினைத்தான். ''ஆள்

ரொம்பவும் ஓய்ந்து தெரிகிறாய், சுரபி. காரில் இவ்வளவு தூரம் வந்த களைப்பாக இருக்கும். அலுப்புதீர ஓய்வெடுக்காமல் அலைந்து நீ வேறு இழுத்துக் கொள்ளக் கூடாது'' என்றான் அவன்.

ஆனால் பூமா உறக்கம் கலைந்து எழுகையில், இவர்கள் இருவரும் அருகில் இருந்தால் அவளுக்கு நன்றாக இருக்குமே என்பது சுரபியின் எண்ணம்.

சிஸ்டரிடம் கேட்டு, மருந்து வேகம் தணிந்து, பூமா விழித்து எழக் குறைந்தது மூன்று மணி நேரமாவது ஆகக் கூடும். அப்போதும் இரவாகி விடுமாதலால் இயற்கை உறக்கமே தொடரக்கூடும் என்று நர்சு கூறவும் இருவருமாக வீடு சென்றனர்.

கதிரவன் தன் மனைவியை வீட்டுக்கு அழைத்துச் சென்றதற்கு வேறொரு காரணமும் இருந்தது. தன் மனதில் இருந்ததை எல்லாம் எந்தவித இடையூறும் இன்றித் தனிமையில் அவளிடம் கொட்ட வேண்டும் என்று எண்ணினான்.

ஆனால் வீடு சென்றபிறகோ அவளிடம் எப்படித் தொடங்குவது என்று புரியாமல் தடுமாறினான். ஒருகாலத்தில் ஒளிப்பே இல்லாமல் கொட்டியவன் இந்த இடைப்பட்ட காலத்தில் அவளை அடியோடு அன்னியளாய் ஒதுக்கி வைத்திருந்தானே.

மருத்துவமனையில், அவளைப் பார்த்ததும் தோன்றிய வேகத்தோடு வேகமாய் எல்லாவற்றையும் அங்கேயே பேசியிருக்கலாமோ என்றுகூடத் தோன்றியது. ஆனால் அவன் சொல்ல நினைத்ததற்கு முழுத் தனிமை தேவைப்பட்டது.

தனிமை கிடைத்த போதோ நாவும் மனமும் ஒத்துழைக்க மறுத்தன.

சற்று அவகாசம் தேடியவனாய், வேலையாளை அழைத்துப் பழச்சாறு கொண்டுவரச் சொன்னான்.

கொண்டு வந்த பழச்சாறை அவளிடம் கொடுத்துக் குடிக்கச் செய்தான்.

குடித்து முடித்ததும், எழுந்து சென்று டம்ளரை சிங்காயில் வைத்தவளை ஏற இறங்கப் பார்த்து, ''ஏன் இப்படி எலும்புக் குச்சியாகி விட்டாய்?'' என்று அதட்டினான். ''முதலில் கொஞ்ச நேரம் படுத்து ஓய்வெடு. இல்லாவிட்டால் ஒடிந்து விழுந்துவிடப் போகிறாய்'' என்று கரிசனத்தோடு கோபம் காட்டினான்.

மெலிந்திருப்பதின் இரகசியத்தைச் சொல்லிவிடலாமா என்று ஒரு கணம் சுரபியின் நாடி துடித்தது. ஆனால் பிள்ளையைக் காட்டி அவனைப் பிடிப்பது போல ஆகிவிடக் கூடாது என்று எண்ணிச் சொல்லாமல் விடுத்தாள்.

ஆனால் கணவன் மனதில் ஏதோ குடைவதை அவளால் உணர முடிந்தது. எனவே பேச்சுக் கொடுக்கும் விதமாய் ''அத்தைக்கு என்ன ஆயிற்று?'' என்று விசாரித்தாள். அது அவள் அறிந்தாக வேண்டிய விஷயமாகவும் இருந்தது.

''என்ன ஆயிற்று!'' என்று உடல் சிலிர்த்தான் கதிரவன். ''என்னென்னவோ ஆகியிருக்கக்கூடும். அப்படி நேராமல் கடவுள் காப்பாற்றினார்'' என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டுவிட்டுச் சொன்னான். ''அம்மா வயிற்றில் கட்டி, கருப்பையில். பெரிய தேங்காய் அளவு கட்டி. மூன்றரை ஆண்டுகளாக வளர விட்டிருக்கிறார்கள்!'' என்றான் கோபமும் வருத்தமுமாக.

''மூன்றரை ஆண்டுகளாகவா? அவ்வளவு பெரிதாகும் வரையிலுமா தெரியாது போயிற்று.. இல்லை, அத்தைக்குத் தெரியும். தெரிந்துதான்...''

''தெரிந்துதான்?''

சுரபிக்குக் கொஞ்சம் தயக்கம்தான். இதை எப்படி எடுத்துக் கொள்வானோ என்று அச்சம்தான். 'அப்பாவுக்கு உதவி செய்ய நீ யார்? அவருக்குப் பிள்ளை இல்லையா? மனைவி இல்லையா?' என்று கேட்டவன் ஆயிற்றே.

ஆனால் அதற்குமேல் மறைக்கவும் முடியாமல் செல்வநாயகி தன்னிடம் வாக்கு வாங்கிய விவரம் தெரிவித்தாள். ''அப்போதே அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். குறைந்தது

கட்டி பற்றி சந்தேகமாவது தோன்றியிருக்க வேண்டும். அதனால்தான்...''

''அதனால்தான் உன்னிடம் வாக்குறுதி பெற்றிருக்கிறார்கள். ஆமாம்... அம்மாவுக்கு இந்த வீட்டு ஆண்களிடம் அவ்வளவாக நம்பிக்கை இல்லைதான். அது சரியே. அவர்களுக்கு நம்பிக்கை இருக்கும் வண்ணம் நாங்கள் நடந்து கொள்ளவும் இல்லைதான். எப்போது எதைப் பிடித்துக் கொண்டு ஆடுவோமோ என்று கவலைதான்''

ஆச்சரியமாய் விழிகள் விரிய அவனை நிமிர்ந்து நோக்கினாள் சுரபி.

இவன் என்ன சொல்கிறான்? அவனது பிழை என்று எதை ஒத்துக் கொள்ள முன்வருகிறான்?!

எங்கே எங்கே என்று அவசரமாகப் பற்றிக் கொள்ள முயன்ற நம்பிக்கைப் பொறியைக் கவனம் கவனம் என்று அடக்கினாள் சுரபி.

இவன் வேறு எதையேனும் கூடச் சொல்லியிருக்கலாம்.

கிடைத்துவிட்ட தொடக்கத்தை விட மனம் இல்லாமல் கதிரவன் மேலே தொடர்ந்தான். ''அம்மாவுக்குத் தொடக்கத்தில் இருந்தே இந்தக் கட்டி பற்றி தெரிந்துதான் இருந்திருக்கிறது!'' என்றான் சிறுகசப்புடன்.

''பின்னே? பின்னே ஏன் சும்மா இருந்தார்கள்? அத்தை ஒன்றும் ஆபரேசனுக்குப் பயந்து மறைக்கிற விதம் இல்லையே. அந்த மாதிரிப் பாமரத்தனம் அவர்களுக்குக் கிடையாதே!'' என்றாள் சுரபி.

''இது வேறுவிதமான பாமரத்தனம்'' என்ற போது கதிரவனின் குரலில் வேதனை இருந்தது.

''அம்மா முதலில் இந்தக் கட்டி பற்றி அறிந்தது அந்தக் குளறுபடியில் நான் வீட்டை விட்டு வெளியேறிய சமயம். இதைவேறு சொல்லி அப்பாவின் மனதை வேதனைப்படுத்தக் கூடாது; உடனடி அபாயம் என்று ஒன்றும் இல்லையே, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்து விட்டார்களாம்.''

''பிறகு அப்பாவும் வெளியேறி விட்டார்கள். என்னதான் கோபத்தில் வீட்டைத் துறந்தாலும் மக்கள், மனைவியைப் பிரிந்து வாழ்வது வேதனைதானே; இந்தச் சமயத்தில் சொல்ல வேண்டாம் என்று மீண்டும் ஒத்திப் போட்டிருக்கிறார்கள். அத்தோடு இதைச் சொல்லி இரக்கம் சம்பாதித்து இருக்கவும் தன்மானம் இடம் தரவில்லை என்றும் தோன்றுகிறது''

''இருக்கும்'' என்று ஆமோதித்தாள் சுரபி. இயல்பான அன்பு இல்லாதபோது, இரக்கத்தைத் தூண்டி அதைப் பெறுவது கேவலம்தான்'' என்று தொடர்ந்து..

''என்ன கேவலமோ..'' என்று தோளைக் குலுக்கியவன் சட்டென பதறிப் போனான். ''சுரபி, உனக்கும் அப்படி ஏதும் இல்லையே? உடம்பு வேறு மிகவும் மெலிந்து போயிருக்கிறாய். அம்மா மாதிரி நீயும் ஏதாவது நோயை மறைத்து வைத்து'க் கொண்டு திரிகிறாயா? இருந்தால் கவுரவம் பாராமல் தயவு செய்து சொல்லிவிடு. இப்படிக் கடைசி நேரத்தில் தலையில் கல்லைப் போடாதே. பிளீஸ்மா'' என்று கவலையுடன் கேட்டான்.

ஆரோக்கியத்தைப் பாதிக்கும்படியாகத் தனக்கு ஒன்றுமே இல்லை என்று தலைமேல் அடித்து சத்தியம் செய்யாத குறையாகச் சுரபி தெளிவுறுத்திய பிறகு, அவளது தூண்டுதலின் பேரில் தாயைப் பற்றி மேலே பேசலானான்.

''பிறகு நம் திருமணம். அந்தச் சமயம் சொல்லி நம் மகிழ்ச்சியைக் குலைக்கக்கூடாது என்று நினைத்தார்களாம்!

''எப்படியும் ஒரு நாள் சொல்லித்தானே ஆகவேண்டும். நம் மணமான பிறகு மூன்று மாதங்கள் நன்றாய்த்தானே.. வந்து.. இங்கேதான் இருந்தேன். ஒரு மாதம் ஆனபிறகாவது சொல்லியிருக்கலாமே''.

''இதையேதான் நானும் கேட்டேன்'' என்றான் கதிரவன். ''ஆபரேசனுக்காக அங்கே ரெடி பண்ணிக் கொண்டு இருந்தபோது கேட்டேன். 'ஒரு மாதம் தள்ளிப் போட்டதற்காவது

ஏதோ, உங்கள் காரணத்தை ஒத்துக் கொள்ளலாம். பிறகு இருந்த இரண்டு மாதங்களிலாவது சொல்லியிருக்கலாமே, அம்மா?'' என்று கேட்டேன்..''

சுரபியின் உள்ளே ஒரு சுமை அகன்றது. அறுவை சிகிச்சைக்காக மயக்க மருந்து கொடுக்கும் முன்னரே கதிரவன் செல்வநாயகியை 'அம்மா' என்று அழைத்து விட்டான். அதுவே அந்தத் தாயைச் சாவிலிருந்து மீட்டிருக்கலாம்...

உள்ளூர நிம்மதியோடு கணவன் பேச்சைக் கேட்டாள் சுரபி.

''நம் இருவர் முகத்தையும் பார்க்கும் போது அந்த மகிழ்ச்சியைக் குறைக்க மனம் வரவில்லையாம். அப்போது நாம் எப்படி இருந்தோம் என்பதுதான் உனக்குத் தெரியுமே. நாளை நாளை என்று தள்ளிக் கொண்டே போய் விட்டது. அத்தோடு மீண்டும் இரகசியமாய்ச் 'செக்கப்' செய்திருக்கிறார்கள்.

கட்டி மெல்ல மெல்ல வளர்ந்து ஒரு சாத்துக்குடிப் பழம் அளவு ஆகிவிட்டதாம். இனி இதற்குச் சிகிச்சை செய்து பயன் இருக்குமா என்ற சந்தேகம் வேறு வந்துவிட்டதாம்''.

''நீ சென்ற பிறகு.. நான் உன்னை விலக்கி அனுப்பிய பிறகு அலுத்துப் போனார்கள். நடப்பது நடக்கட்டும்; இவ்வளவு காலம் பொறுத்து இப்போதும் தான் மற்றவர்களுக்கு ஏன் அதிகப்படி வேதனை தரவேண்டும். கடைசியாக.. ஒரே தடவையாக மொத்தமாக வருத்தப்பட்டு முடித்துக் கொள்ளட்டும் என்று நினைத்து விட்டார்களாம்.

''ஆனால் எங்களுக்கு அதிக வேதனை வேண்டாம் என்று அம்மா சகித்த துன்பம் எவ்வளவு தெரியுமா, சுரபி? கடைசியாக வலி தாங்காமல் மயங்கி விடும் அளவுக்கு இந்த வலி எப்படிப் பொறுத்தார்கள் என்று டாக்டர்களுக்கே ஆச்சரியம்!''

''சுரபி, கணவனுக்காகப் பிள்ளைகளுக்காக என்று சகிப்பதும், துன்பம் மறைப்பதுமாக இதுவேதான் உங்கள் வாழ்க்

கையா, சுரபி? மறைத்து ஏமாற்றினாய் என்று உன்மேல் குற்றம் சாட்டினேனே: மறைக்க நேர்ந்ததே உனக்குத் துன்பமாகத் தானே இருந்திருக்கும்? அந்த உறுத்தலைத் தாங்கிக் கொண்டேதானே நீ வாழ்ந்திருக்க வேண்டும்? அன்று இப்படி எண்ணிப் பார்க்கத் தோன்றவில்லையே!''

''தான் உண்டு விட்டதாகப் பொய் புகன்று, இருந்த உணவைக் கணவனுக்குக் கொடுத்த ஏழைப் பெண் பற்றி நீ சொன்னாயே; அப்போது நினைத்தேன்; இது சும்மா கற்பனை. இந்த மாதிரி எங்கும் நடக்காது என்று''.

''ஆனால் நடக்கும். நீங்கள் மெய்யாகவே சுரபிகள்தான். கணவன், பிள்ளைகள் என்று சுகத்தை வாரி வழங்கும் வள்ளல்கள். ஒருசமயத்தில் உண்மை புரியாமல் உன்னை வாட்டி வதைத்ததற்காக என்னை மன்னிப்பாயா, கண்மணி?''

சட்டெனக் கைதூக்கி, மென்விரல்களால் கணவனின் வாயை மெல்லப் பொத்தினாள் சுரபி. ''ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாத இடங்களில் தான் மன்னிப்பு, அது இது எல்லாம். நமக்குள் அவசியமில்லை, கதிர்'' என்றாள் மிருதுவான குரலில்.

மனைவியை நேராக நோக்கி, ''அதாவது.. இவள் எனக்கு நன்மையே செய்வாள் என்கிற நம்பிக்கை இருந்தால் கோபத்துக்கும் குழப்பத்துக்கும் இடமில்லை; பிறகு மன்னிப்பு கேட்கவும் தேவையில்லை என்கிறாயா?'' என்று கேட்டான் கதிரவன். ''முதலில் அந்த நம்பிக்கை இல்லாதிருந்தது ஏன்..''

கணவன், கழிவிரக்கம் கொண்டு, தன்னைத்தானே வதைத்துக் கொள்வதைக் காணப் பிடிக்காமல், ''கதிர்... மணி என்ன ஆகிறது, பாருங்கள். இனி நாம் ஏதாவது சாப்பிட்டு விட்டுப் போகுமுன் பூமா விழித்துக் கொண்டு விடலாம். அவளுக்கும் மாமாவுக்கும் கையோடு சாப்பாடு கொண்டு போய் விடலாமா?'' என்று அவசரம் காட்டி எழுந்தவளுக்கு, லேசாகத் தலை சுற்றிவிடத் தள்ளாடி விழப் போனாள்.

வினாடிக்குள் அவளைத் தாங்கிப் பிடித்த கதிரவன் ஒரே டியடியாகப் பயந்து போனான். ''சுரபி.. சுரபி.. உனக்கும் ஏதோ உடம்பு சரியில்லைதானா? மறைக்காதே. கடவுளே.. அம்மா ஒருவர் இழுத்துக் கொண்டு படுத்திருப்பதே போதும். உனக்கும் ஏதாவது என்றால் நான் தாங்க மாட்டேன். சுரபி.. வா.. சாப்பாடு ஒன்றும் வேண்டாம். முதலில் ஒரு டாக்டரிடம் உன்னைக் காட்ட வேண்டும். வா...'' என்று துடித்தான் அவன்.

''போகலாம்.. ஆனால்...''

''என்ன ஆனால் கீனால்?'' என்று பதட்டப்பட்டான் அவன். ''முதலில் கிளம்பு. சீக்கிரம்...''

அவன் பேசாதது போலவே பாவித்து, ''கிளம்புமுன் நல்ல கைராசிக்கார லேடி டாக்டர் யாரென்று விசாரித்துத் தெரிந்து அவரிடம்தான் போக வேண்டும்'' என்று விழிகளில் குறும்பு மின்ன அவள் சொல்லி முடிக்குமுன் சுரபியின் கன்னங்களில் ரோஜாக்கள் எட்டிப் பார்த்தன.

அவளது பேச்சும் பாவனையும் புரியாமல், ''எ...ன்..ன?'' என்று இழுத்தவனின் விழிகள் சட்டென வியப்பும் ஆர்வமுமாய் மலர்ந்தன. ''என் அமுதசுரபி!'' என்று அவளை இறுக அணைத்தவன், உடனே விடுவித்து விலகி நின்றான். ''இப்படிக் கட்டிப் பிடித்தால் பாப்பாவுக்கு வலிக்குமோ?''

வெட்கத்தால் முகம் சிவந்த போதும், அடக்கமாட்டாமல் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினாள், சுரபி.